# செஞ்சக்தி

2016 ஆகஸ்ட் அணி 12

விலை ரூபா 20.00

மக்கள் விடுதலை முன்னணியின் உத்தியோகபூர்வ செய்தித்தாள்

UNIVERSITY OF JAFFNA LIBRARY 15 DEC 2016 PERIODICALS DIVISION

LIBRARIAN'S OFFICE RECEIVED 01 AUG 2016 LIBRARY UNIVERSITY OF JAFFNA

## ஒன்றாய் நாம் பறந்திடுவோம்!




## நாட்டுப் பிரச்சினைகள் பற்றிய விரிவான உரையாடல்

# மக்கள் விடுதலை முன்னணி

# வீட்டுக்கு வீடு பிரச்சாரம்

சகல துறைகளிலும் பிரச்சினைகள் உக்கிரமடைந்து மக்கள் பாரிய இன்னல்களைச் எதிர்கொண்டிருக்கும் வேளையில், அந்தப் பிரச்சினைகளை மூடிமறைத்து மக்களின் கவனத்தை திசைத்திருப்பி வருகின்ற வேளையில், மக்கள் படும் கஷ்டங்கள் பற்றியும் அதற்கான தீர்வுகள் பற்றிய ஆக்கப்பூர்வமான உரையாடலை ஆரம்பிப்பதை குறிக்கோளாகக் கொண்டு ஆகஸ்ட் மாதம் முதல் வீடு வீடாகச் செல்லும் இயக்கத்தை ஆரம்பிப்பதற்கு மக்கள் விடுதலை முன்னணி முடிவுச் செய்துள்ளது. விசேடமாக மக்களுடன் மேற்கொள்ளப்படும் இந்த உரையாடலானது அவர்களை அணிதிரட்டி அறிவூட்டி மக்கள் சக்தியை கட்டியெழுப்பும் வரையிலான பரந்தப்பட்ட விதமாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

நாட்டின் பொருளாதார பிரச்சினைக்குத் தீர்வுகாணாத மைத்திரி - ரணில் கூட்டாச்சி, அந்த சுமையை மக்கள் மீது சுமத்துவதற்கான வழிகளைத் தேடி வருகிறது. அதேபோன்று அவர்களுக்கு கிடைத்த மக்கள் ஆணையை புறம்தள்ளி முன்னய ஆட்சியின் ஊழல், மோசடிக்காரர்களுக்கு எதிரான விசாரணைகள் அனைத்தும் 'டீல்' அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டு கடந்த ராஜபக்ஷ ஆட்சியை பின்தள்ளிவிட்டு ஊழல் மோசடியில் ஈடுபட்டு வருகிறது. இந்த நிலைமையில் ராஜபக்ஷ குடும்ப ஆட்சியை தோற்கடிப்பதற்காக வாக்களித்த மக்கள் நம்பிக்கையிழந்துள்ளனர். இதன்போது தோற்கடிக்கப்பட்டவர்களும் தற்போது சட்டத்தின் முன்னால் தண்டிக்கப்பட வேண்டியவர்களான ராஜபக்ஷ ஆட்சியின் மோசடிக்காரர்கள், மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவதை நோக்கமாக் கொண்டு மக்களை திசைதிருப்புவதற்கு எத்தனித்து வருகின்றனர்.

இந்த நிலைமைகளில் மக்கள் படும் கஷ்டங்களின் யதார்த்த நிலையும் அதற்கு காரணமான அரசியலையும் அதற்கு மாற்றாகத் தெரிவு செய்ய வேண்டிய வழிகளைப் பற்றி வீடு வீடாகச் சென்று விரிவான கருத்தாடலை முன்னெடுப்பதற்கு ம.வி.மு எதிர்பார்க்கிறது.

தொடர்ச்சி 11ம் பக்கம்...

**நீதியான தேசம்! நியாயமான சமுதாயம்! அடிமையில்லா மனிதன்!**

# உலகம் முழுவதிலுமான ஏகாதிபத்தியத்தின் தலையீட்டை கண்டிப்போம்!

## மக்கள் விடுதலை முன்னணியின் சர்வதேசப் பிரிவு

ஏகாதிபத்திய நாடுகளின் உதவியுடன் வளர்ச்சியடையும் பயங்கரவாத அமைப்புகளின் செயற்பாடுகளும் தென் சீன கடற்பரப்பில் மேற்கொள்ளப்படுகின்ற ஏகாதிபத்தியத் தலையீட்டையும் கண்டித்து ம.வி.மு சர்வதேசப் பிரிவு கடந்த 13ம் திகதி வெளியிட்ட அறிக்கை,

அவ்வறிக்கையில்...

பங்களாதேசத்தின் தலைநகர் டாக்காவுக்கு அருகில் கடந்த சில நாட்களாக இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலை மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குழு மிக வண்மையாக்க கண்டிக்கிறது. முப்பது வருட யுத்தத்தின் துன்பம், வேதனைகள் மற்றும் தாக்கங்களின் அனுபவத்தை தன்னகத்தே கொண்டுள்ள நாம் இவ்வாறான சந்தர்ப்பத்தில் மக்களிடையே தோன்றும் அழுத்தங்கள மற்றும் கவலைக்கிடமான நிலை பற்றி நன்கு புரிந்து வைத்துள்ளோம். அதேபோன்று அந்த தாக்குதலில் உயிரிழந்த பங்களாதேச மற்றும் வெளிநாட்டு பிரசைகளின் குடும்பங்களுக்கு எங்களின் ஆழந்த அனுதாபத்தினையும் தெரிவித்துக் கொள்கிறோம். அதேபோன்று இத்தாக்குதலில் காயமடைந்த அனைவரும் துரிதமாக குணமடைய வேண்டுகின்றோம்.

ஏகாதிபத்திய நாடுகளால் ஆரம்பித்துள்ளதும் அதன் அனுசரனையைப் பெறும் பயங்கரவாத மற்றும் இனவாத அடிப்படைவாத அமைப்புகளின் நடவடிக்கை காரணமாக இன்று உலகில் பலநாடுகளில் பேரழிவுகளும் கொடூரமான யுத்தமும் ஏற்பட்டுள்ளது. விசேடமாக கடந்த காலத்தில் ஏகாதிபத்தியவாதிகளின் தேவைக்கேற்ப உருவாக்கப்பட்ட 'முகாஜிதீன்', 'அல் கைடா', 'ஐ.எஸ்.ஐ.எஸ்' போன்ற பயங்கரவாத அமைப்புகள் நேரடியாக ஏகாதிபத்திய நாடுகளின் மற்றும் அவர்களின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்றவாறு செயற்படும் நாடுகளின், யுத்த மற்றும் நீதி உதவிகள் மீது தங்கியிருப்பது ஒன்றும் இரகசியமான விடயமல்ல.

தற்போது ஆசியப் பிரந்தியத்தில் ஆப்கானிஸ்த்தான், பாகிஷ்த்தான் முழுமையாகவும் பங்களாதேசம் மற்றும் இந்தியா அரைவாசியும் இந்த தீவிரவாத அமைப்புகளின் தாக்குதலுக்கு இரையாகியுள்ளது. மத்திய கிழக்கில் ஆரம்பமான இந்த தாக்குதல் அமெரிக்காவுக்கு, ஐரோப்பாவுக்கு அதேபோன்று ஆசியாவுக்கும் விரிவடைந்து வருகிறது. மூன்று தசாப்தங்களின் இரண்டு சுதந்திரப் போராட்டத்திற்கு பங்களிப்பினை வழங்கிய பங்களாதேசத்து மக்கள் இந்த பயங்கரவாத செயற்பாடுகளை எதிர்கொண்டு தமது நாட்டை மீட்பார்களென நாங்கள் நம்புகின்றோம்.

அதேபோன்று தென்னாசியா மற்றும் ஆசியப் பிராந்தியத்தில் தமது யுத்தம் மற்றும் பொருளாதாரதார் தந்திரோபாயத்தின் அடுத்த இறையாக காவுகொள்வதற்காக ஏகாதிபத்தியவாதிகளால் மேற்கொள்ளப்படும் முயற்ச்சிகளை மக்கள் விடுதலை முன்னணியான நாம் மிக வண்மையாக் கண்டிக்கின்றோம்.

விசேடமாக சீனாவை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் இந்த ஆத்திரமூட்டல் நடவடிக்கைகளை குறிப்பிட்டு கூறுகின்றோம். தென் சீன கடற்பரப்பில் பல தீவுகளின் உரிமை தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினையானது அவற்றிக்கு உரிமையுள்ள நாடுகளுக்கிடையில் பேச்சுவார்த்தையின் மூலமாகத் தீர்க்கப்படல் வேண்டுமென நாங்கள் நம்புகிறோம். அந்தப் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு ஐக்கிய அமெரிக்காவால் பிராந்தியத்தில் மேற்கொள்ளும் தலையீட்டையும் ஆத்திரமூட்டல் நடவடிக்கைகளையும் கண்டிக்கின்றோம். தமது இருப்பிற்காக உலகம் முழுவதிலும் யுத்தத்தை கட்டவிழ்த்துவிடும் ஏகாதிபத்தியம் அதன் விளைவாக ஏற்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் பற்றியும் அதனுடன் தொடர்புடைய பிரச்சிகளைப் பற்றியும் பேசுவதற்கு தமது சிரேஷ்ட அதிகாரிகளை தொடர்ச்சியாக அனுப்பிவைப்பது நகைப்புக்குரிய விடயமாகக் கருதும் நாங்கள் ஐக்கிய அமெரிக்கா உள்ளிட்ட எகாதிபத்திய நாடுகளின் யுத்தவாத, ஆக்கிரமிப்பு பாத்திரத்தை உலக மக்களின் வெறுப்புக்கு ஆளாகியிருப்பதை இதில் சுட்டக்காட்ட விரும்புகின்றோம் பயங்கரவாதத்தாலும், அடிப்படைவாதம் மற்றும் ஏகாதிபத்திய தலையிட்டின் காரணமாக ஒடுக்குமுறைக்கு உள்ளாகியிருக்கும் உலக வாழ் அனைத்து மக்களுக்கும் ஏகாதிபத்தியத்தைக் கட்டிப்போடும் சங்கிலித் தொடரின் ஒன்றாக மாறும்படி உளமார்ந்த தோழமையுடன் கோட்டுக் கொள்கின்றோம்.

# நாடலாவிய மட்டத்தில் VAT எதிர்ப்பு போராட்டங்கள்




கட்சி, நிற, இன, மத வேறுபாடின்றி நாம் அனைவரும் முகம்கொடுக்கும் வற் வரி அதிகரிக்கப்பட்ட பிரச்சினைக்கு முகம்கொடுத்துள்ளோம். இதற்கு எதிராக புத்திஜீவிகள், கல்விமான்கள் உட்பட பல தரப்பினர் போராட்டத்தில் குதித்துள்ளார்கள். ரணில்-மைத்திரி அரசு அநீதியான முறையில் மக்கள் மீது சுமத்தப்பட்ட வற் வரிக்கு எதிராக முதன் முதலாக மக்கள் விடுதலை முன்னணியே போராட்ட களத்தில் இறங்கியது.

துண்டுப்பிரசுரங்கள் விநியோகிப்பு, கருத்தரங்குகள், ஆர்பாட்டங்கள் என்று பல்வேறு திசைகளில் இப்போராட்டங்களை முன்னெடுத்து பொதுமக்களையும் இவற்றுடன் இணைத்துக் கொள்வதற்கு செயற்பட்டது. இந்த அநீதியான வற் வரியை நீக்கும் வரை தொடர்ந்தும் இப்போராட்டங்களை முன்னெடுப்பதாக மக்கள் விடுதலை முன்னணி உறுதியளித்துள்ளது.

# மஹிந்தவுக்கும் ரணிலுக்கும் இடையிலேயே அருவருக்கத்த "டீல்"

## மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தோழர் அநுர திசாநாயக்க




மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் "டீல்" உள்ளது. அதாவது தம்மீது எழும் குற்றச்சாட்டுக்களில் இருந்து தம்மை பாதுகாத்துக்கொள்ள மஹிந்த ராஜபக்ஷவுக்கு ரணில் தேவைப்படுகின்றார். அதேபோல், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை இரண்டாக்கி குழப்பத்தை ஏற்படுத்த ரணிலுக்கும் மஹிந்த அணியினர் தேவைப்படுகின்றனர் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தோழர் அனுர திசாநாயக்க தெரிவித்தார்.

தாம் என்ன குற்றம் செய்தாலும், எவ்வாறு செயற்பட்டாலும் ரணில் தன்னை காப்பாற்றுவார் என்ற நம்பிக்கை மஹிந்த ராஜபக்ஷவுக்கு உள்ளது. அந்த நம்பிக்கையில் தான் அவர் நடமாடுகின்றார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார் .

அவர் மேலும் கூறுகையில்,

மக்கள் விடுதலை முன்னணி ஐக்கிய தேசியக் கட்சியுடன் மறைமுக தொடர்புகளை வைத்துள்ளதாக கூறுகின்றனர். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அதை தெரிவித்துள்ளார். உண்மையில் ரணில் விக்கிரமசிங்கவுடன் யாருக்கு இரகசிய உடன்படிக்கை உள்ளது. எமக்கா அல்லது இன்று பொது எதிரணியென கூறிகொள்ளும் நபர்களுக்கா? சிரந்தி ராஜபக்ஷவை நிதி மோசடி குற்றச்சாட்டில் நிதிக்குற்றப் புலனாய்வு பிரிவு விசாரணைக்கு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் அங்கு விசாரணைகளை நடத்தாது சபாநாயகர் வீட்டில் சென்று வாக்குமூலத்தைக் கொடுத்தது எவ்வாறு? இதில் "டீல்" இல்லையா? அதேபோல் இந்த விசாரணையில் சிரந்தி ராஜபக்ஷவை கைதுசெய்து நீதிமன்றில் ஒப்படைக்க அறிக்கை வந்தும் இன்றுவரை அவரை கைதுசெய்யாது நான்குமாத காலமாக காப்பாற்றுவது யார்? மஹிந்த ராஜபக்ஷ நேரடியாக ரணில் விக்கிரமசிங்கவிடம் தொடர்புகளை ஏற்படுத்தியே இந்த குற்றங்களில் இருந்து தப்பித்து வருகின்றார். இது தான் இவர்கள் கூறும் "டீல்". அதேபோல் கடவுச்சீட்டு விவகாரத்தில் விமல் வீரவன்சவை கைது செய்யாது காப்பாற்றியது யார்? இந்த விடயத்தை பிரதமர் பாராளுமன்றத்தில் நேரடியாகவே தெரிவித்தார்.

பசில் ராஜபக்ஷ கைதுசெய்யப்படுவதும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதும் ஒரு டீல்தான். ஜனாதிபதி பிரதமருடன் இவர்கள் உடன்படிக்கைகளை செய்துகொண்டு நாடகமாடுகின்றனர்.

ரணில் எப்போதும் ஜே.ஆர் இன் கொள்கையில் பயணிப்பவர். தமக்கு எதிராக எழும் சவால்களை இல்லாமலாக்கி தமக்கு எதிராக எதிரணி உருவாகக்கூடாது என்பதே ஜே.ஆர் இன் கொள்கையாகும்.

அதே வழியில் தான் ரணிலும் பயணிக்கின்றார், இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அவ்வாறான நகர்வால்தான் பிளவுபட்டுள்ளது. ராஜபக்ஷவுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பெரிய டீல் உள்ளது. அதாவது தம்மீது எழும் குற்றச்சாட்டுகளில் இருந்து தம்மை பாதுகாத்துக்கொள்ள மஹிந்த ராஜபக்ஷ வுக்கு ரணில் தேவைப்படுகின்றார். அதேபோல் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை இரண்டாக்கி குழப்பத்தை ஏற்படுத்த ரணிலுக்கும் மஹிந்த அணியினர் தேவைப்படுகின்றனர். இந்த டீல் தான் இன்று முன்னெடுக்கப்படுகின்றது. தாம் என்ன குற்றம் செய்தாலும், எவ்வாறு செயற்பட்டாலும் ரணில் தன்னை காப்பாற்றுவார் என்ற நம்பிக்கை மஹிந்த ராஜபக்ஷவுக்கு உள்ளது. அந்த நம்பிக்கையில் தான் அவர் நடமாடுகின்றார்.

அதேபோல் இந்த பாதயாத்திரைகூட ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான ஒன்றல்ல. இது ரணிலின் ஆட்சியை பலப்படுத்தும் வகையில் முன்னெடுக்கப்பட்ட பாதயாத்திரையாகும். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிரதான உரையின்போது கூட ரணில் விக்கிரமசிங்கவின் பெயரையோ அவர்களது செயற்பாடுகளையோ ஏன் விமர்சிக்கவில்லை. எம்மையும், சுயாதின ஆணைக்குழுக்களை மட்டுமே அவர் விமர்சித்தார். ஆகவே யார் இரகசிய உடன்படிக்கைகளை மேற்கொண்டு மக்களை ஏமாற்றுகின்றனர் என்பதை இப்போது நன்றாக தெரிந்துகொள்ள வேண்டும்.

இப்போது இருக்கும் ஆட்சியும் மக்களை ஏமாற்றுகின்றது. மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை ஏமாற்றி மிகவும் மோசமான வகையில் ஆட்சியை முன்னெடுத்து செல்கின்றனர். அதேபோல் முன்னாள் ஆட்சியும் நாட்டுக்கு ஒருபோதும் பொருந்தாத ஒன்றாகும். அவர்கள சிங்கள உடையில் களவெடுத்தனர். இவர்கள் ஆங்கில உடையில் களவெடுக்கின்றனர். ஆகவே இப்போது இருக்கும் ரணில் மைத்திரி ஆட்சியை விரட்டியடித்து அதே நிலையில் மஹிந்த ஆட்சியை இன்னொருமுறை நாட்டில் ஏற்படுத்தாத வகையிலும் மக்களுடன் இணைந்து நல்லாட்சி ஒன்றை உருவாக்கவேண்டும். அதற்கான நடவடிக்கைகளை நாம் ஏற்படுத்திவருகின்றோம். மக்கள் இப்போது சரியாக சிந்திக்க வேண்டும் என்றார்.

# செஞ்சக்தி

மக்கள் விடுதலை முன்னணியின் வெளியீடு
464/20, பன்னிபிட்டிய வீதி, பெலவத்த, பத்தரமுள்ள.
Tel:0112-785612, E-mail niyamuwanews@gmail.com


## இனவாதத்திற்கு இனியும் இடமளியோம்!

அண்மையில் யாழ் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற சம்பவமானது மீண்டும் இனவாதம் தலைவிரித்தாடும் அபாய நிலை தேற்றம்பெற்றுள்ளது. மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட இனவாதத்திற்கு எதிரான சிவில் அமைப்புகளும் சமூகச் செயற்பாட்டாளர்களும் துரிதமாக மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனாக இனவாதத் தீ பரவுவது தடுக்கப்பட்டது. அதனால் இனவாதத்தைப் பரப்புவோருக்கு 'அழுவதற்காகக் கண்ணில் குத்தியதைப் போன்று' இரண்டு பக்கத்திலிருந்தும் காத்துக் கொண்டிருந்த இனவாதிகளின் இனவாதத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாது போயுள்ளது. இதில் கவைலைக்கிடமான விடயம் என்னவென்றால் இந்தச் சம்பவம் 'கறுப்பு ஜுலை இடம்பெற்ற' ஜுலை மாதத்தில் நிகழ்ந்திருப்பதாகும். உண்மையில் இந்த தாக்குதலை கண்டிக்க வேண்டும். அதேபோன்று இனியும் இவ்வாறு நடக்காதிருப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும்.


எவ்வாறாயினும் இன்னும் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. அது இப்போது நீறுபூத்த நெருப்பாகவே அமிழ்திருக்கிறது. இதன்போது அரசாங்கம் பொறுப்பற்ற விதமாகவே நடந்துக் கொண்டது. தமது பிள்ளைகளின் பாதுகாப்பிற்கு உரிய நடவடிக்கை எடுக்கும் வரையில் தமது பிள்ளைகளை யாழ்ப்பாணத்திற்கு அனுப்புவதில்லை என சிங்கள பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர். பிள்ளைகளும் அச்சத்துடனேயே இருக்கின்றனர். அது நியாயமானதாகும். இந்த பயத்தைப் போக்கி பாதுகாப்பை உறுதிப்படுத்தி மாணவர்களுக்குச் சுதந்திரமாக கல்வி கற்பதற்கான சூழலை உருவாக்கிக் கொடுக்கும் பொறுப்பு அரசாங்கத்திடமே உள்ளது. ஆனால் அரசாங்கமோ இதிலும் ஆமை வேகத்திலேயே ஊர்ந்துக் கொண்டிருக்கிறது. அரசாங்கத்தின் இந்த பொறுப்பற்றப் போக்கு இனவாதிகளுக்கே சாதகமாக அமையும்.

இனவாதத்தாலும் ஒற்றுமையின்மையினாலும் 30 வருட யுத்தத்திற்கு பலியான மக்களும் நாடும் இதைவிட இனவாதத்தை தோற்கடிப்பதற்காக விவேகமான நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும். ஆனால் இந்த பிரச்சினையின் உண்மையான பொறுப்பாளிகளான சிங்கள தமிழ் முதலாளித்துவ தலைவர்களும் முதலாளித்துவ அரசாங்கமும் இனவாதத்தின் மீதே உயிர்வாழ எண்ணுகிறது. தீர்வாக இனவாதத்தையே முனவைக்கின்றனர். கவலைக்கிடமான நிலை அதுவேயாகும். இனவாதத்தால் அழிவுற்ற நாட்டை கட்டியெழுப்புவதற்கு பாடசாலை வகுப்பறையிலும், பல்கலைக்கழகத்திலிருநதும் ஆரம்பித்தாக வேண்டும். ஆனால் இன்னமும் இலங்கையில் பாடசாலையிலும் பல்கலைக்கழகத்திலும் இனவாதத்தை பரப்புவதையும், போஷித்து பாதுகாக்கும் நடவடிக்கைகளையே முன்னெடுக்கப்படுகிறது. பல்கலைக்கழகம் போன்ற கல்வியில் உயர்பீடமாக இயங்கும் இடத்தில் இனவாதமும் இனவாத கலகங்களும் ஏற்படுவது கவலைக்குரிய விடயமாகும். அதை உடனடியாக மாற்றியாக வேண்டும். ஆனால் ஆட்சியை கைபற்றுவதற்கு இருக்கும் ஒரே ஆயுதமாக இனவாதத்தை தேர்ந்தெடுத்திருக்கும் அரசியல் தலைவர்கள் இருக்கும்போது இனவாதம் பரப்புவதை தவிர தேசிய ஒற்றுமை கட்டியெழுப்பப்புவதற்கு சந்தர்ப்பமில்லை.

புகையிரதம் ஓடுவதற்கு இரண்டு தண்டவாளங்கள் தேவைப்படுவதைப் போன்றே இனவாதத்திற்கும் இரண்டு பக்கங்கள் தேவைப்படுகிறது. சிங்கள இனவாதமின்றி தமிழ் இனவாதத்திற்கும் தமிழ் இனவாதமின்றி சிங்கள இனவாதத்திற்கும், இவை இரண்டும் இல்லாது முஸ்லிம் இனவாதத்திற்கும் உயிர்வாழ முடியாது. அதனால் தமிழ் இனவாதிகள் தெரிந்தோ தெரியாமலோ செய்துவருவது சிங்கள இனவாதத்தை தோற்கடிப்பதல்ல அதனை போஷிப்பதே ஆகும். அதேபோன்று சிங்கள இனவாதத்தால் தமிழ் அல்லது முஸ்லிம் இனவாதத்தை தோற்கடிப்பதற்குப் பதிலாக அவற்றை போஷித்து வருகின்றனர். அதனாலேயே பல்கலைக்கழகமொன்றில் அசம்பாவிதம் ஏற்பட்டவுடன் சமூகம் அதை ஆபத்தான நிலையாக உணர்கின்றனர்.

இச்சம்பவத்துக்கு காரணமானவரென கருதப்படும் சசிதரனைவிட அவரது மனதில் இனவாத விஷத்தை விதைத்தவர்களும் இன்னமும் விதைத்து வருபவர்களான வடக்கின் இனவாத அரசியல் தலைவர்களே ஆபத்தானவர்கள். அதேபோன்று வடக்கின் சம்பவத்தை ஆதாரகமாகக் கொண்டு முகநூல் புத்தகத்தில் இனவாத அறிக்கைகளை வெளியிடும் சிங்கள இளைஞர்களைவிட அவர்கள் மனதில் இனவாத விஷத்தை விதைத்த சிங்கள இனவாதத் தலைவர்களே ஆபத்தானவர்கள். ஏனெனில் கருத்தியலை பரப்புவதற்கான தகமையும் அதிகாரமும் இருப்பது அரசியல்வாதிகளிடம் ஆகும். தமது வங்குரோத்து அரசியலை மறைப்பதற்காக விக்னேஸ்வரன், சம்பந்தன் போன்றவர்களுக்கு தமிழ் இனவாதம் தேவைப்படுவதைப் போன்றே தமது அரசியல் பிற்போக்கும் வங்குரோத்து தனத்தை மறைப்பதற்கு ராஜபக்ஸ கும்பலுக்கும் இனவாதம் தேவைப்படுகிறது. ரணில்-மைத்திரி அரசாங்கத்திற்கும் அது தேவைப்படுகிறது. முஸ்லிம் இனவாதமும் இதேபோன்றாகும். இவர்களால் விதைக்கப்படும் இனவாதத்திற்கு இறையாவது இந்நாட்டில் ஒடுக்கப்படும் இளைஞர்களும் அப்பாவி மக்களுமேயாகும். பொது மக்களுக்கு குறிப்பாக இளைஞர்களுக்கு இனவாதத்தால் கிடைத்திருப்பது துன்பமும் கஷ்டமுமே தவிர சுகபோகமல்ல. தீய முடிவுகளே தவிர நல்ல முடிவுகள் அல்ல. அதனால் இனவாதத்தை தோற்கடிக்க இளம் தலைமுறையினர் அணிதிரண்டாக வேண்டும். அதை முற்றாகத் தோற்கடித்தாக வேண்டும். அதற்கான காலம் உதயமாகியுள்ளது.

## யாழ் பல்கலைக்கழக மோதலில் இன்னொரு பக்கம்



1970ம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதிக்கும் சுதந்திரம் பெற்ற காலத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் ஒரே ஒரேயொரு பல்கலைக்கழகமாக இருந்த பேராதனை பல்கலைக்கழகத்துக்கு ஏறத்தாள 4000மாணவர்கள் பொறியில், விஞ்ஞான, கலைப்பீடங்களுக்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். அவர்களில் 50சதவீத மாணவர்கள் தமிழ் மொழி பேசும் மாணவர்கள் என்ற புள்ளிவிவரங்கள் அப்போது வெளிவந்திருந்தன. 1972ம் ஆண்டின் பின்னர் தரப்படுத்தல் முறையொன்றின் ஊடாகத் தமிழ் மாணவர்கள் குறைக்கப்பட்ட நிலை தோண்றியிருந்தது. இது பழைய கதை அந்தக் காலப்பகுதியில் பகிடிவதையின் கொடுமைகள் பற்றிப் பத்திரிகைகளில் அதிகச் செய்திகள் வந்துள்ளன. நாம் மேற்கூறிய காலப்பகுதிக்குள் பகிடிவதையினால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் அநேகர். ரூபா ரத்நசீலி என்ற காலியைச் சேர்ந்த மாணவி இப்போதும் சக்கரை நாற்காலியில் உலாவிக்கொண்டிருக்கிறார் என்பதை இந்நாடே அறியும் ஒரு கசப்பான பழைய சம்பவமாகும்.

இனி யாழ் வளாகத்தை நோக்குவோம் 1974ம் ஆண்டில் ஆட்சி புரிந்த இடதுசாரிகளின் பிரதான பங்குடன் ஆட்சிபீடத்திலிருந்த சிறிமாவோ அம்மையாளரால் யாழ் வளாகம் திறக்கப்பட்டது. அதனை திறக்கவிடாமல் வீரகாளி அம்மன் ஆலய முன்றலில் உண்ணாவிரதமிருந்த தமிழத் தேசிய அமைப்பினர் ராணுவ பொலிஸ் பிரசன்னத்தினால் அப்போது இடதுசாரித் தலைவர்களில் ஒருவராக இருந்த யாழ் இந்துக் கல்லூரி எம். கார்த்திகேசன் அதிபர் அவர்களை தமது உண்ணாவிரதத்துக்கு இடையூறு விளைவிக்காத வகையில் அவரின் உதவியையும் நாடியிருந்தனர். பின்னர் உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டனர். யாழ் வளாகம் திட்டமிட்ட முறையில் திறக்கப்பட்டது. இது தமிழ் மக்கள் அறியாத ஒன்றல்ல. இவ்வளாகம் படிப்படியாக வளர்ச்சி பெற்றது மட்டுமல்லாது நாட்டின் பல பாகங்களிலும் பல பல்கலைக்கழகங்களை திறப்பதற்கு வித்திட்டது. அதேபோன்று கிழக்கு மாகாணத்திலும் பல்கலைக்கழகம் திறக்கப்பட்டது.


அனேகமாக தென்னிலங்கை வளாகங்களின் மாணவர் சங்கங்கள் இடதுசாரித்துவ நோக்கம் கொண்டவைகளாகவே இருந்துள்ளன அக்காலப்பகுதியில் சகல இன மாணவர்களிடமும் ஐக்கியம் நிலவியிருந்தது. இனரீதியிலான முரண்பாட்டு அரசியல் நாட்டில் வலுவடைந்த பின்னர் மாணவர்களிடமும் இனரீதியிலான அரசியல் தொற்றிக் கொண்டது. யாழ் வளாகத்திலும் இனரீதியிலான கருத்துக்கள் தமிழ் மாணவர்களிடம் விதைக்கபட்பட்டது. தமிழ் பத்திரிகைகளும் தமிழ் தேசியம் என்ற பக்கத்திற்கு சென்றுள்ளன. இன்றும் கூடக் கொழும்புத் தினசரியொன்று அண்மையில் பல்கலைகழக மோதல்கள் தொடர்பாக கருத்து வெளியிட்டிருந்தது. அப்பத்திரிகையின் நோக்கு தமிழ் தேசியம் சார்ந்ததாகவே காணப்பட்டது. யாழ் வளாகத்தில் கல்வி கற்கும் தமிழ், சிங்களம், முஸ்லிம் மாணவர்கள் தமது எதிர்காலத்தைச் சிந்திப்பதை விடுத்து இனத்துவ சிந்தனையை வளர்ப்பதாக இருக்கக் கூடாது என்று கூறுவதை விடுத்து யாழ் வளாகம் தமிழ் மக்களின் விடுதலைக்காக பங்காற்றியிருந்தது என்றும் யாழ் வளாக மாணவர்கள் தமிழ் தேசியத்தை காப்பாற்ற வேண்டும் என்றும் வளாகத்தின் ஆதிக்க சக்தியாக விளங்க வேண்டும் என்றும் கருத்து தெரிவித்திருப்பது மாணவரை பழைய நிலைக்கு கொண்டு செல்வதற்காகும். அரசியலில் உண்மையான மாற்றம் வர்க்க அடிப்படையிலான மாற்றமாகும். அதற்கே மாணவர்கள் ஐக்கியப் பட வேண்டும்.

யுத்த காலத்திலும் முடிவுற்ற சில ஆண்டுகளிலும் தென்பகுதிப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி கிடைத்த தமிழ் மாணவர்கள் பயப்பீதியினாலும், தென்பகுதியில் வாழ்ந்து வரும் உறவினர்கள் வடக்கு கிழக்கில் இருந்து வரும் மாணவர்களுடன் உறவு வைப்பது தமக்கு ஆபத்தாகிவிடும் என்று எண்ணியதால் இம்மாணவர்களை தமது வீடுகளுக்கு அழைக்கக் கூடாதென எண்ணியிருந்தனர். அதனால் எத்தனை தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழக படிப்பையும் கல்வியக்கல்லூரி படிப்பையும் இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அதேபோன்று சிங்கள மாணவர்களுக்கு யாழ் பல்லைக்கழகத்தில் அனுமதி கிடைத்த வேளையில் சில மாணவர்கள் படையினரின் துனையுடனும் அவர்களின் முகாம்களிலும் தங்கிப் பல்கலைக்கழக படிப்பினை மேற்கொண்டனர். இவ்வாறான நிலமைகள் யாரால் ஏற்படுத்தப்பட்டன என்று மீள் பரிசீலனை செய்வதுடன் நின்றுவிடாமல் மாணவர்களின் முன்னேற்றத்துக்கு எதிர்கால அரசியல் எப்படி அமைய வேண்டும் என்று சிந்திப்பது மாணவர்களின் கடமையாகும்.

எதிர்காலத்தில் நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுக்கப் போகின்றது. எமது நாட்டின் இருபெரும் மேட்டுக்குடி ஆட்சியாளர்களால் நாடு அழிவடைவது திண்ணம். நீதியான தேசத்தையோ அடிமையில்லா மனித

தொடர்ச்சி 11ம் பக்கம்...

# மக்கள் விடுதலை முன்னணித் தலைவரின் யாழ் விஜயம்!





ஜுலை மாதம் 14, 15, 16ம் திகதிகளில் மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் தோழர் அநுர திசாநாக்க வடபகுதிக்கான விசேட விஜமொன்றை மெற்கொண்டிருந்தார். 14ம் திகதி சாவகச்சேரி பிரதேச முக்கியத்தர்களுடன் உரையாடும் சந்தர்ப்பம் கிட்டியிருந்தது. பிரதானமாக எமது நாட்டை ஐக்கியப் படுத்தி சரியான பொருளாதார இலக்கில் கொண்டுச் செல்ல மக்கள் அணிதிரள வேண்டும் என்றும் இன்றயை பொருளாதாரத்தில் 35சதவீதத்தை 10சதவீத மேல்தர வர்க்கத்தினர் அனுபவித்து வருகின்றனர் என்றும் அதனை மாற்றியமைப்பதற்காக மக்கள் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார். சந்திப்பில் கலந்துகொண்ட மக்களும் கடந்தகாலத்தில் தவறான அரசியல் வழிநடத்தலினால் தமிழ் மக்கள் அவதிப்பட்ட நிலமைகளுக்கு முகம்கொடுத்தனர் என்பதைக் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டனர். இனிவரும் காலங்களில் தேசிய ரீதியல் செயற்படுவதற்கும் இணக்கம் தெரிவித்தனர். அதன்பின்னர் மிருசுவில் கிராமத்திலும் மக்கள் சந்திப்புக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அங்கேயும் மக்கள் அநுர தோழருக்கு அதிக முக்கியத்துவம கொடுத்து கலந்துரையாடினர். அங்கே சில ஆசிரியர்கள், புத்திஜிவிகள் கலந்துகொண்டு இன்றைய ஆட்சியாளர்களின் தவறான அரசியல் நடவடிக்கைகளை கண்டிப்பதைக் காண முடிந்தது. மக்கள் தற்போது உண்மை நிலமைகளை அறிந்து கொள்ளும் பொருட்டு மிக விரிவாகத் தோழர் அநுர உரையாற்றியிருந்தார்.

அடுத்து யாழ் வணிகர்கள் உடனான சந்திப்பில் மக்கள் விடுதலை முன்னணி யாழ் மாவட்ட அமைப்பாளர் தோழர் இரா. சந்திரசேகரும், சோஷலிச இளைஞர் சங்க வடபகுதி அமைப்பாளர் தோழர் நேசன் உள்ளிட்ட கட்சி உறுப்பினர்கள் சகிதம் தோழர் அநுர கலந்துகொண்டார். அவ்வேளையில் வணிகர்கள் தாம் எதிர்நோக்கும் வியாபாரம் தொடர்பான பிரச்சினைகளையும், சமகால அரசியல் நிலமைகளையும் கலந்துரையாடப்பட்டது. இதில் வணிகர் சங்கத் தலைவர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். மேலும் தமிழ் மக்களின் கைதிகள், காணாமற்போனோர் பிரச்சினை, நில அபகரிப்பு பிரச்சினைகள் தொடர்பாகவும் எடுத்து கூறியிருந்தனர். தோழர் அநுர தனதுரையில் தங்களால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகள் யாவும் உண்மையான பிரச்சினைகள் எனவும் எமது கட்சி இப்பிரச்சினைகள் சம்பந்தமாக பாராளுமன்றத்தில் பல தடவைகள் குரலெழுப்பி வந்துள்ளதாகவும் தமிழ் மக்கள் முகம்கொடுக்கும் தனியான பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக செயற்படுவோம் என்றும், அடிப்படையான சமூக மாற்றம் ஒன்றினூடாகவே சகல மக்களுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும், அதற்காக சகல மக்களும் ஐக்கியப் படுமாறும் மேலும் கூறியிருந்தார். நாடு பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெற்று 68வருங்களாக ஆட்சிபுரிந்தோர் தமது வர்க்க குணாம்சங்களுடனேயே நாட்டையும் மக்களையும் ஆட்சிபுரிந்து வந்துள்ளனர் என்றும் கலந்துரையாடல்களில் தெரிவித்தார்.

அடுத்ததாக ஜுலை 15ம் திகதி காலையில் யாழ் நகரப்பகுதியில் அநீதியான வற்வரி அதிகரிப்புக்கு எதிராக துண்டுப்பிரசுர விநியோகிப்பில் கலந்து கொண்டார். அவ்வேளையில் வடபகுதியின் பல ஊடகவியளாலர்கள் அவரை சந்தித்து பேட்டிகள் எடுத்ததுடன் அதில் வடபகுதி தொடர்பாகவும் இங்கு வாழும் மக்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு மக்கள் விடுதலை முன்னணி எவ்வாறு பங்களிக்கும் என்பது தொடர்பாகவும் கருத்து வெளியிட்டார். அதன்பின் மார்க்சிச, லெனினிச கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளரான சி.கா. செந்திவேல் அவர்கள் உள்ளிட்ட தோழர்கள் உடனான கலந்துரையாடல் தேசிய கலை, இலக்கிய பேரவை மண்டபத்தில் இடம்பெற்றது. அவ்வேளையில் எமது நோக்கம் தொடர்பான அரசியற் வழிமுறைகள் சம்பந்தமாக இரு பகுதியினரும் மனம்விட்டு பேசினார்கள். தோழர் சி.கா. செந்திவேல் அவர்கள் மக்கள் விடுதலை முன்னணியின் கொள்கைகள் சரியான திசையில் செல்கின்றதெனவும் தாமும் இக்கொள்கைகளையே கொண்டுள்ளோம் என்றும் இனிவரும் காலங்களில் ஒன்றிணைந்து அரசியலை முன்னெடுப்பதற்கு முயற்சிக்க முடியும் என்றும் கூறியிருந்தார்.

அன்று மாலை கல்விமான்கள், பேராசிரியர்கள் உள்ளிட்ட பல பிரமுகர்களை யாழ் வளாகத்தில் சந்தித்திருந்தார். அவர்களும் சூமுகமான முறையில் கலந்துரையாடினர். அப்போது கருத்து தெரிவித்திருந்த பேராசிரியர்கள் இந்த சமூக மாற்றத்தின் தேவையை வலியுறுத்தியிருந்தனர். அதற்காக உழைக்கும் மக்கள் விடுதலை முன்னணியை பாராட்டியும் இருந்தனர்.

மறுநாள் வவுனியா மாவட்டத்திற்கு விஜயம் செய்த தோழர் அநுர திசாநாயக்க வவுனியா வணிகர் சங்கத்தின் அங்கத்தவர்களை சந்தித்தார். அப்போது அவர்கள் பெரும்வரவேற்பு அளித்தார்கள். பின்பு அவர்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளை தெரிவித்தனர், எதிர்வரும் காலங்களில் அப்பிரச்சினைகளை தீர்ப்பதற்காக நடவடிக்கைகளை எடுப்பதாக தோழர் அநுர திசாநாக்க தெரிவித்தார். அதேபோன்று சட்டத்தரணிகள் சங்க பிரதிநிதிகளையும் வைத்தியர் சங்க அங்கத்தவர்களையும் சந்தித்து அவர்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளை கலந்தாலோசித்தோம் அப்போது அவர்கள் கூறியது, அவர்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பாக யாருமே கவனத்தில் கொள்வதில்லை என்று மிகவும் வேதனையுடன் தமது ஆதங்கங்களைத் தெரிவித்தார்கள். அதேபோன்று விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளை சந்தித்தபோது வவுனியாவில் நிர்மாணிக்கவுள்ள உத்தேச பொருளாதார வலையம் தொடர்பாக அவர்கள் கருத்து வெளியிட்டார்கள். இது தொடர்பாக அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடியே ஒரு தீர்வை எட்டிக்கொள்ள வேண்டும் என்றும் தோழர் அநுர திசாநாயக்க தெரிவித்தார்.

மற்றும் யுத்தம் முடிவடைந்து 7வருடங்கள் கடந்திருந்தாலும் காணாமற் போனோர் பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படாமலேயே இருக்கின்றது. எனவே பல மாவட்டங்களிலிருந்து வருகை தந்திருந்த காணாமற்போனோரின் உறவுகளை வவுனியாவில் வைத்து சந்தித்தார். அதில் அவர் கருத்து வெளியிடுகையில், எனக்கும் காணாமற்போனோர் தொடர்பான நேரடி அனுபவம் இருக்கின்றது எனது சகோதரனும் 88,89 காலப்பகுதியில் காணமற் போனார் எனது தாயும் போகாத இடமில்லை, சந்திக்காத அதிகாரிகள் இல்லை. ஆனாலும் இன்றும் அவர் காணாமற் போனவராகவே உள்ளார். எனவே இங்கிருக்கும் தாய், தந்தையரின், உறவினரின் வேதனை எனக்கு நன்றாகப் புரிகின்றது, உங்களது பிரச்சினை தொடர்பாக பல தடவைகளில் நாம் பாராளுமன்றத்திலும் வேறு கதைக்கவேண்டிய இடங்களில் கதைத்திருக்கின்றோம் எனவே எதிர்காலத்திலும் இப்பிரச்சினை தொடர்பாக நீங்கள் எடுக்கும் எந்த நடவடிக்கைக்கும் எமது பூரண ஒத்துழைப்பை வழங்குவதற்கு தயாராகவுள்ளோம் என்றும் கூறினார்.

வடபகுதியை எடுத்துக்கொண்டால் வேறு இடங்களைவிட பல்வேறு பிரச்சினைகளை இப்பகுதி மக்கள் சந்தித்து வருகின்றார்கள். காணாமற் போனோர் பிரச்சினை, சிறைக்கைதிகள் பிரச்சினை, காணிப்பிரச்சினை, தொழில்வாய்ப்பற்ற பிரச்சினை, சுகாதார வசதியற்ற பிரச்சினை, வீட்டுவசதியற்ற பிரச்சினை போன்ற பல பிரச்சினைகளை சந்தித்து வருகிறார்கள் எனவே வடமாகாணத்தை ஒரு விசேட பிரதேசமாக பிரகடனப்படுத்தி இப்பிரச்சினைகளை தீர்ப்பதற்காக துரித நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

# தேசிய அரசாங்கத்தின் இரண்டாவது இன்னிங்ஸ்

ஐ.தே.க - ஸ்ரீ.ல.சு.க கூட்டு அரசாங்கமான அதாவது பெயரளவிலான தேசிய அரசாங்கத்தின் ஆயட் காலத்தை ஐந்து வருடமாக நீடித்திருப்பதாகவும் அதை வீழத்த எவருக்கும் இடமளிக்க மாட்டோமென ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன அண்மையில் தெரிவித்திந்தார்.

2015 ஆகஸ்ட் பொதுத் தேர்தலின் பின்னர் கூட்டாட்சியின் ஒரு வருட காலத்தை அவதானிக்கின்ற போது இந்த அரசாங்கம் எத்திசையில் செல்கிறது என்பதை புரிந்துகொள்ள முடியும். ஒரு வருடத்தினுல் தமது இயலாமையையும், ஒழுங்கீனத்தையும் வெளிபடுத்தியுள்ளது. ஆட்சிபீடமேறுவதற்கு முன்னர் தாங்கள் கூறிய நல்லாட்சி, ஜனநாயகம், பொருளாதார முகாமைத்துவம் என்பன கற்பனாவாத கருத்துக்களாக போயுள்ளன. கடந்த 68 ஆண்டுகளாக நாட்டை ஆண்டவர்கள் போன்றே தற்போதைய ஆட்சியாளர்களும், பொருளாதாரத்தை கட்டியெழுப்பி நாட்டை முன்னேற்றுவதற்கோ, மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கோ முடியாது. அது மட்டுமல்ல அதற்காகச் சிறிய முயற்சிகளையாவது மேற்கொள்வதாக தெரியவில்லை. கடந்த வருட அரசாங்கத்தின் முதலாவது இன்னிங்ஸின் முதலாவது அடி வற் வரி அதிகரிப்பாகும். (அது ஆறு ஓட்டங்களாக இருந்தாலும் அது சட்டவிரோத ஓட்டமென நீதிமன்றம் அறிவித்தது) கடன் வாங்குதல், மத்திய வங்கி முறி மோசடியை மறைத்தல், பொருட்களின் விலை அதிகரிப்பு, ஊர்வலம் நடத்திய மாணவர்கள் மீதான தாக்குதல், திருடர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்கியமை, இவைகள் மக்கள் மீதான சுமையே தவிர நன்மைகள் எதுவும் கிடையாது. வருவாய் வீழ்ச்சியடைதல், கடன் சுமை வருடம் தோறும் அதிகரித்தல், வருமானத்தை விட கடன் சுமை, அதுமட்டுமல்ல ஊழல், மோசடி, வீண்விரயத்தின் காரணமாக அரசாங்கம் பாரிய நிதி நெருக்கடியில் அமிழ்ந்துப் போயுள்ளது. அரசாங்கத்திற்கு வருமானம் இல்லாத காரணத்தால் நோய் வாய்ப்பட்டுள்ளது நோய்க்கு இரத்தம் தேவைப்படும்போது மக்களின் இரத்தத்தை வரியாக, அபராதமாக உறிஞ்சுகிறது. அதாவது அரசாங்கம் தமது முதலாவது இன்னிங்சில் தமது இயலாமையை நன்கு வெளிப்படுத்தியுள்ளது.

அப்படியானால் அரசாங்கம் இரண்டாவது இன்னிங்சை விளையாடப்போவது யாருக்காக? எதற்காக? மிகத் தெளிவாக அது பதவியையும் அதிகாரத்தையும் தக்க வைத்துகொள்வதற்கே இன்றி வேறு எதற்கும் அல்ல. அதில் மக்கள் நலன் துளியும் கிடையாது. தற்போதைய பாராளுமன்றத்தில் ஐ.தே.கவுக்கோ ஸ்ரீ.ல.சு.கவுக்கோ தனித்து ஆட்சியமைக்க முடியாது. இதன் காரணமாகவே கூட்டாச்சி அமைக்கப்பட்டுள்ளது. இருபது வருடங்களாக எதிர்க்கட்சியில் இருந்த ஐ.தே.கவுக்கு அதிகாரத்தை ருசித்தாக வேண்டும். தனியாக இல்லாவிட்டாலும் கூட்டாகச் சரி



அதை அனுபவித்தாக வேண்டும். 19வது அரசியல் திருத்தத்திற்கமைய (3-2 பெரும்பான்மை இல்லாமல்) பாராளுமன்றத்தை நான்கரை வருடத்திற்கு முன் கலைக்க முடியாது. அவசர தேர்தல் மூலமாகவும் தற்போதைய பாராளுமன்றத்தில் மாற்றத்தை கொண்டு வரமுடியாது. ஐ.தே.கவிடம் ஜனாதிபதி பதவியும் இல்லை. அது மைத்திரியிடமே உள்ளது. அவர் ஸ்ரீ.ல.சு.கவின் தற்போதைய தலைவராவார். அதனால் ஸ்ரீ.ல.சு.கவுடனான தேனிலவு காலத்தை நீடிப்பதைத் தவிர ஐ.தே.வுக்கு வேறு வழி கிடையாது. அதனால் ஐ.தே.க கூட்டாக அதிகாரத்தை பகிர்ந்து கொள்வதையே நோக்கமாக கொண்டுள்ளது. ஐ.தே.கவின் ஆட்சிக்கு எதிராக எதிர் கட்சியிலிருந்து போராட வேண்டிய ஸ்ரீ.ல.சு.கட்சியில் அரைவாசி பேர் அரசாங்கத்துடன் இணைந்து ஒத்துழைப்பது ஐ.தே.கவுக்கு சாதகமாகும்.

மறுபுறத்தில் மகிந்த ராஜபக்ஷவின் கூட்டு எதிரணிக் குமபல் ரணில் விக்கிரமசிங்காவுடன் மறைமுக இணக்கப்பாட்டுடன் செயற்படுவதால் மைத்திரியின் தலைமையிலான ஸ்ரீ.ல.சு.கவின் உட்கட்சிபூசல் ஐ.தே.கவுக்கு சாதகமாக அமைந்திருக்கிறது. அதனால் கூட்டாச்சி அவர்களுக்குத் தேவைப்படுகிறது. இந்நிலைமைகளால் மக்கள் திகிலடைந்து போயுள்ளனர். மகிந்த ராஜபக்ஷவின் 'சட்டவிரோத' பந்து வீச்சு மைத்திரி - ரணிலின் கூட்டாச்சிக்கு சாதகமாகவே அமைந்துள்ளது. இதற்கான சிறந்த உதாரணம், ரவி கருணாநாயக்காவுக்கு எதிராக கொண்டு வந்த நம்பிக்கையில்லா பிரேரணையாகும். அதாவது உண்மையிலேயே மக்களின் நம்பிக்கையிழந்திருந்த ரவி கருணாநாயக்க பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிரபராதியாக்கப்படுகிறார்.

மைத்திரியின் பக்கமிருந்து பார்க்கின்றபோது இந்த கூட்டாச்சியை ஐந்து வருடத்திற்கு நீடிப்பதைத் தவிர மாற்று வழி கிடையாது. மைத்திரியிடம் ஜனாதிபதிப் பதவி இருந்தபோதிலும் கட்சியின் கீழ் மட்டத்தினின் ஆதரவு அவருக்கு இல்லை. அதனால் அவருக்கு எப்படியாவது இந்த அரசாங்கத்திலேயே தங்கியிருந்தாக வேண்டும். அரச அதிகாரம் இல்லாத ஜனாதிபதிப் பதவி 'நொண்டிக் குதிரையைப் போன்றதென்பது' அவருக்குத் தெரியும். அதேபோன்று கட்சியை தம்வசப்படுத்திக் கொள்வதற்கு, ஸ்ரீ.ல.சு.கவைச் சேர்ந்த சிலருக்காவது அமைச்சுப் பதவிகளை வழங்கி தமக்கு சார்பாக வைத்துக் கொள்ள வேண்டும்.

ஐ.தே.க இருபது வருடங்களாக எதிர்க்கட்சியில் இருந்தமையினால் அவர்களுக்கு இருக்கும் அதிகாரத் தாகத்தைப் போன்றே, ஸ்ரீ.ல.சு.கவுக்கு இருபது வருடங்களாக ஆட்சியில் இருந்தமையால் அவர்களுக்கு பதவியின்றி உயிர்வாழ முடியாது. ஆகவே இங்கு பதவி மோகமே முதன்மைப் படுத்தப்படுகிறது. ஐ.தே.கவும் ஸ்ரீ.ல.சு.கவும் ஒன்றிணைவதற்கான நோக்கமே பெயரளவிலான தேசிய அரசாங்கத்தின் யதார்த்த நிலையாகும். பல்வேறு தாக்கங்களின் மத்தியில் இரண்டு வருடம் ஐந்து வருடமானது இதனாலாகும்.

> அதனால் அதிகார வெறியுடன் மைத்திரியுடன் இருப்போருக்கு நம்பிக்கை ஊட்டுவதற்காக மென்மேலும் அமைச்சுப் பதிவிகளையும் சலுகைகலையும் வழங்குவதன் மூலமாக தொடர்ந்தும் ஆட்சியில் இருக்க முடியுமென்ற உத்தரவாதத்தை மைத்திரி வழங்கியுள்ளார்.

இதேபோன்று ஸ்ரீ.ல.சு.கட்சியும் நெருக்கடியில் அமிழ்ந்துள்ளது. ஐ.தே.கவுடன் ஒன்றாக ஆட்சி நடத்துவதால் அரசாங்கத்தின் மீது மக்களின் வெறுப்பு ஏற்படும்போது கீழ்மட்ட ஸ்ரீ.ல.சு.க உறுப்பினர்களின் எதிர்ப்பினை அரசாங்கத்திலிருக்கும் ஸ்ரீ.ல.சு.கட்சியின் எதிர்கொள்கின்றனர். அதேபோன்று மறுபுறத்தில் அதிகாரம் இல்லாமல் அவர்களால் உயிர்வாழவும் முடியாது. இந்த முரண்பாட்டினை சமாளிப்பதற்காக அவர்கள் கையாளும் தந்திரோபாயமே, அரசாங்கத்தில் தற்காலிகமாக இருப்பதாக முதலில் இரண்டு வருடத்திற்கு ஒப்பந்தம் செய்தது. அதேபோன்று அரசாங்கத்தின் ஒரு சில நடவடிக்கைகளுக்கும் தமக்கும் உடன்பாடு இல்லை எனக்கூறி தற்காப்பு தந்திரோபாயத்தை கையாண்டு வருகின்றனர்.

முதல் இரண்டு வருடம் முடிவதற்குள் மைத்திரி கூட்டாச்சி ஒப்பந்தத்தை ஐந்து வருடத்திற்கு நீடிப்பதற்கான காரணமென்ன? ஸ்ரீ.ல.சுகட்சியின் அதிகாரத்தை ராஜபக்ஷ கும்பல் கைப்பற்றுவதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்தும்போது, அரசாங்கத்தில் இரண்டு வருடம் மாத்திரமே இருக்கப் போகிறோம் என்ற எண்ணம் ஸ்ரீ.ல.சு.கவினரிடம் ஏற்படுமானால், மைத்திரியைச் சூழ இருப்போர் மைத்திரியை கைவிடும் நிலைத் தோன்றுமென்பதால், அதனால் அதிகார வெறியுடன் மைத்திரியுடன் இருப்போருக்கு நம்பிக்கை ஊட்டுவதற்காக மென்மேலும் அமைச்சுப் பதிவிகளையும் சலுகைகலையும் வழங்குவதன் மூலமாக தொடர்ந்தும் ஆட்சியில் இருக்க முடியுமென்ற அத்தாட்சியை மைத்திரி வழங்கியுள்ளார்.

இவைகள் அனைத்தையும் உற்று நோக்கும்போது மிகத் தெளிவாக இந்த போலியான தேசிய அரசாங்கமெனும் கூட்டாட்சி ஸ்ரீ.ல.சு.கவில் மைத்திரி அணியும், ஐ.தே.கவும் எதிரணியில் இருக்கும் மகிந்த ராஜபக்ஷ ாவும் முன்னெடுத்து பதவியைப் பிடிக்க முயற்சிப்பதும் தமது அனைத்து நடவடிக்கைகளையும் நாட்டைப் பற்றியோ மக்களைப் பற்றியோ அக்கறையினால் அல்ல. தங்களது அதிகாரப் பேராசையே முதன்மைப் படுத்தப்பட்டுள்ளது. அதிகாரத்தை கைபற்றியோர் தொடர்ந்தும் அதை தக்கவைத்துக் கொள்வதற்கான நடவடிக்கையில் ஈடுபடும்போது, அதிகாரத்தை இழந்தோர் மீண்டும் அதிகாரத்தை

தொடர்ச்சி 11ம் பக்கம்...















# வேற்றுமைகளி

"ஒன்றாய் நாம் பறந்திடுவோம்" சகோதரத்துவ தினத்தின் தொணிப்பொருள் வெவ்வேறு திசைகளில் பறப்பதற்கு பழக்கப்படுத்தியுள்ள எம்மை, ஒரே நோக்கத்திற்காக ஒரே திசையில் பறப்பதற்கான வேண்டுகோளே சகோதரத்துவ தினத்தின் எதிர்பார்ப்புகளாகும். இன்றைக்கு 33 வருட்களுக்கு முன்னர் அதாவது 1983 ஜுலை 23ம் திகதி என்பது இந்நாட்டில் பாரியதொரு இனக்கலவரத்தை கட்டவிழ்த்து விடப்பட்ட நாள், அன்று எமது நாட்டில் தேசிய ஒற்றுமையை நிர்மாணிப்பதற்கான பயணத்துக்கு மிகப்பெரிய பங்கம் விளைவித்த நாளாகவே வரலாற்றில் பதிந்துள்ளது. தமிழ், சிங்கள மக்களிடையே விரிசல் அதிகரிக்கப்பட்ட நாள், அன்று ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியாளர்களால் திட்டமிட்டு ஏற்படுத்திய அந்த விரிசலை இல்லாதொழித்து மீண்டும் இனகளுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு பல நபர்களும் அமைப்புகளும் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருவதை காண்கிறோம். அந்த வகையில் சோஷலிச இளைஞர் சங்கம் பாரியதொரு பங்களிப்பினை ஆற்றி வருகிறது. எமது நாட்டில் யுத்தம் இடம்பெற்ற காலகட்டத்தில் அதாவது 2008ம் ஆண்டிலிருந்து ஜுலை 23ம் திகதியை சகோதரத்துவ தினமாக பிரகடனப்படுத்தி தமிழ் அரசியற் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை உட்பட நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் பல்வேறு செயற் திட்டங்களை முன்னெடுத்து வந்துள்ளது. அவற்றை கொழும்பில் மட்டுமன்றி வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களிலும் நடைமுறைப் படுத்தியயுள்ளது. இம்முறை முதற்தடவையாக யாழ் மண்ணில் சகோதரத்துவ தினத்தை நடாத்தப்பட்டது. சகோதரத்துவ தினத்தை சகோதரத்துவ வாரமாக பிரகடனப்படுத்தியது. அதற்கிணங்க சகோதரத்துவ இலக்கிய விழாவும், இலக்கிய விழாவுக்கு சமாந்தரமாக தேசிய ஒற்றுமையை என்ற தொணிப்பொருளில் கவிதை, சித்திரம், நடனம் ஆகிய துறைகளில் பாடசாலை மட்டத்திலும், திறந்த மட்டத்திலும் இலக்கியப் போட்டிகளும் நடாத்தப்பட்டது. அவற்றுள் வெற்றி பெற்றோருக்கு வெற்றிக் கேடயங்கள்,பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கியது உட்பட கலாசார நிகழ்வும் ஜுலை 23ம் திகதி யாழ்ப்பாணம் மணிக்கூட்டு கோபுரத்துக்கு அருகாமையில் அமைந்துள்ள ரிமர் மண்டபத்தில் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. அம்மண்டபத்தின் நுழைவாயிலில் சகோதரத்துவ இலக்கிய விழா என்று தமிழ், சிங்களம் மொழிகளில் பொறித்து நிர்மாணிக்கப்படடிருந்த வரவேற்பு தோரணம் நல்லிணக்தை விரும்பும் அனைவரையும் வரவேற்கும் வகையில் அமைந்திருந்தது. இலக்கிய விழாவின் முதல் சுற்று ஆரம்பமாகியது இதில் பிரதம விருந்தினர்களாக பலர் கலந்துகொண்டனர். அந்த வரிசையில் யாழ் பல்கலைக்கழகத்தின் பேராசியர் ஆ. இரகுநாதன் அவர்கள், என்றும் எம்முடன்





அதனை கடந்து மண்டப வலாகத்திற்கு பிரவேசிக்கும் போது இடப்பக்க முற்றலில் நிர்மாணிக்கப்பட்டிருந்த அரணில் இலக்கிய போட்டிகளுக்காக அனுப்பப் பட்டிருந்த சித்திரங்கள், கவிதைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகளை காட்சியப்படுத்தியமை அவற்றை அனுபியோரை ஊக்குவித்ததோடு நல்லிணக்கத்துக்காக, தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்கு எவ்வளவு ஆர்வத்துடன் இருந்திருக்கிறார்கள் என்பதையும் உணர முடிந்தது. அதேபோன்று நாட்டின் பல்வேறு இடங்களிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்து தோழர், தோழிகள் யாழ்ப்பாணத்தின் முறிந்த மொழியில் தமது கருத்துக்களை பறிமாறிக்கொண்டமை கண்களைக் குளிரவைக்கும் காட்சியாகும். பிற்பகல் 3.00 மணியளவில் கைகோர்த்து நிற்கும் யாழ் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் சாமிநாதன் விமல் அவர்கள், மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தோழர் அனுர திசாநாயக்க, மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினரும் யாழ் மாவட்ட அமைப்பாளருமான தோழர் இராமலிங்கம் சந்திரசேகர், மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் தோழர் பிமல் ரத்நாயக்க, சோஷ லிச இளைஞர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் தோழர் எரங்க குணசேகரா, சோஷ லிச இளைஞர் சங்கத்தின் யாழ் மாவட்ட அமைப்பாளர் தோழர் நேசன், யாழ் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவர் சங்கத்தின் தலைவர் நெவாஸ் அவர்கள், அச்சங்கத்தின் செயலாளர் தனுசன் அவர்கள், யாழ் பல்கலைக்கழகத்தின் பொறியில்பீட மாணவர்

சங்கத்
ரவிந்து
வடமா
தவிசா
அவர்க
நாடகக
இலக்க
ஜீவா,

அவர்க
நிறுவ
சளனி,
ஆசிரி
அவர்க
கலை
இந்நிக
சிறப்பி
அதில்
புதிதா
மங்கள
விழா
யாழ்
பேராசி
அவர்க
நாடக
நிரிஎல்
உரைய
ஒற்றுமை
அவசிய
நிர்மான
கலைத்
பொறுப்
தெரிவி
யாழ்
கலைப்
தலைவ

# ளின் ஒற்றுமை!

சங்கத்தின் உபதலைவர் ரவிந்து சாலிந்த அவர்கள், வடமாகாண சபையின் தவிசாளர் சி.வி.கே.சிவஞானம் அவர்கள், சிரேஷ்ட நாடகக் கலைஞர்களும் இலக்கியவாதிகளுமான அத்தனி ஜீவா, பராக்கிரம நிரிஎல்லே





அவர்கள், யாழ் எண்டடேட்மன் நிறுவனத்தின் இயக்குனர் சளனி, சித்திரக் கலைஞரும் ஆசிரியருமான வோல்வின் அவர்கள் உட்பட இன்னும் பல கலைஞர்கள், புத்திஜீவிகள் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

அதில் ஆரம்ப நிகழ்வாக புதிதாக வடிவமைக்கப்பட்ட மங்கள விளக்கேற்றலுடன் விழா ஆரம்பிக்கப்பட்டதோடு யாழ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஆ. இரகுநாதன் அவர்கள் மற்றும் சிரேஷ்ட நாடக இயக்குனர் பராக்கிர நிரிஎல்லே ஆகியோர் உரையாற்றுகையில் தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்புவதன் அவசியத்தையும் அதனை நிர்மாணிப்பதற்காக கலைத்துறைக்கு பாரியதொரு பொறுப்பு உள்ளதாகவும் தெரிவித்தனர். அதன்பின் யாழ் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவர் சங்கத்தின் தலைவர் நெவாஸ் அவர்கள் உரையாற்றுகையில், சோஷலிச இளைஞர் சங்கத்தின் இந்த நடவடிக்கையான இனங்களுக்கிடையே நல்லிணக்கதை ஏற்படுத்தும் முயற்சிக்கு எமது பூரண ஒத்துழைப்பை வழங்குகிறோம். ஏனென்றால் எமது நோக்கமும் இதுவே ஆகும். எனவே தான் நாம் இன்று இவ்விடத்திற்கு வருகை தந்திருக்கிறோம். யாழ் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற சம்பவம் ஒரு திடீர் சம்பவம், ஊடகங்கள் மற்றும் அரசியற்வாதிகளே இதனை பெரிது படுத்தியுள்ளனர். சிங்கள மாணவர்களுடன் எமக்கு எந்த முரண்பாடுகளும் கிடையாது. நாங்கள் ஒன்றாக இருக்கிறோம், சாப்பிடுகிறோம், ஒரேவிடுதியில் கூட தங்கியுள்ளோம். எதிர்வரும் காலங்களிலும் இந்தப் பல்கலைக்கழகத்தில் எவ்வித முரண்பாடுகளும் இன்றி அனைவரும் ஒற்றுமையாக இருப்பதற்கே எதிர்பார்க்கிறோம் என்று தெரிவித்தார்.

அத்துடன் யாழ் பல்கலைக்கழகத்தின் பொறியியல்பீட மாணவர் சங்கத்தின் உபதலைவர் ரவிந்து சாலிந்த கருத்து வெளியிடுகையில், அண்மையில் யாழ் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற சம்பவத்தை நாம் முற்றாக நிராகரிக்கிறோம். பல்கலைக்கழகங்களிலோ அல்லது வேறு எந்த இடத்திலும் இனவாதச் செயல்கள் தேவையற்றவையாகும். மாணவன் என்பது முழு உலகிற்கும் உரித்தானவர், சிங்களம், தமிழ், முஸ்லிம் என்ற வேற்றுமை இருக்கக் கூடாது. நான் எனது தனிப்பட் ஓர் அனுபவத்தை கூறுகிறேன், சில வருடங்களுக்கு முன்பு எமக்கு பல்கலைக்கழகத்தில் கலாசார நிகழ்சியொன்று நடாத்தும் தேவையிருந்தது.

இதற்கு சிங்களப் பெயரை நாம் முன்மொழிந்தோம், ஆனால் தமிழ் மாணவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை, தமிழ் மாணவர்கள் தமிழ் பெயரை முன்மொழிந்தார்கள் ஆனால் அதனை சிங்கள மாணவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை, கலாசார நிகழ்வை இரத்துசெய்யும் இடத்திற்கு தள்ளப்பட்டது என்றாலும் நாங்கள் முயற்சியைக் கைவிடவில்லை பின்பு நாங்கள் இருசாராரும் ஒன்றிணைந்து “Dersert Flash” என்ற ஆங்கிலப் பெயரை சூட்டினோம் ஆங்கில மொழி அவ்வளவு தெரியாவிட்டாலும் மிகவும் சிறப்பாக அந்நிகழ்வை நடாத்தினோம். அன்று நாங்கள் முரண்பட்டு சச்சரவுகளை ஏற்படுத்தியிருந்தால் இன்று பொறியிலாளர் பிரிவு இயங்காமல் போயிருக்கும் இன்று தமிழ் மாணவர்களுக்காக உயிரை கொடுப்பதற்கு சிங்கள மாணவர்கள் இருக்கின்றார்கள், அதேபோன்று சிங்கள மாணவர்களுக்காக உயிரையும் கொடுப்பதற்காக தமிழ் மாணவர்கள் இருக்கின்றார்கள் என்பதனை மிகப்பெருமையுடன் கூறுகிறேன், எனவே மொழியோ கலாசாரமோ இதற்கு தடையல்ல புரிந்துணர்வே இதில் முக்கியமான விடயம். என்று அவர் கூறினார்.

யாழ் பல்கலைக்கழகத்தின் முஸ்லிம் மாணவர்களுக்கு இதில் கலந்துகொள்ளும் சந்தர்ப்பம் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்றாலும் அவர்கள் வாழ்த்து செய்தியொன்றை அனுப்பியிருந்தார்கள் அதில், இன்று சோஷலிச இளைஞர் சங்கத்தினர் சகோதரத்துவ தினத்தை நடாத்துவது மிகவும் பொருத்தமான சந்தர்பத்திலாகும், அதற்கு எமது ஒத்துழைப்புகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறோம். தேசிய ஒற்றுமையையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவது இந்நாட்டு அனைத்து மக்களினதும் அத்தியாவசியத் தேவையாக இருக்க வேண்டும். இம்முறை இந்நிகழ்வில் கலந்து கொள்ள முடியாவிட்டாலும், எதிர்வரும் காலங்களில் கட்டாயமாக இவற்றுடன் பங்குகொள்வோம் என்றும் அதில் குறிப்பிட்டிருந்தது.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தோழர் அநுர திசாநாயக்க உரையாற்றுகையில், சிங்கம். தமிழ், முஸ்லிம் ஆகிய நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து உழைத்து நாட்டுக்கு வருமானத்தை ஈட்டடித் தருகிறோம். ஆனால் இந்த வருமானம் பகிர்ந்தளிக்கப்படும் போது சிங்களவர்களுக்கு தனியாகப் பகிரப்படுகிறதா?

தொடர்ச்சி 11ம் பக்கம்...













# போதை வஸ்து கடத்தலில் பின்னணியில் யார்?



எமது நாட்டில் மிக அண்மைக் காலமாக போதைவஸ்து பாவனை அதிகரித்துள்ளதாக அரச தரப்பினரே ஏற்றுக்கொண்டுள்ளனர் இதனால் மக்களும் விசனம் அடைந்துள்ளனர். இலங்கையில் பல பாகங்களில் கோடிக்கணக்கான ரூபா மதிப்புடைய போதை பொருட்களை கைப்பற்றி உள்ளதான தகவல்களை தினசரிப் பத்திரிகைகளின் மூலம் நாம் அறிகின்றோம். இதில் அண்மைக் காலமாக யாழ்குடாநாட்டிலும் பெருமளவு போதை பொருட்கள் கண்டுபிடித்திருப்பது பற்றியும் யோசிக்கத் தூண்டுகிறது. கைப்பற்றப்பட்ட போதை பொருட்களுக்கு என்ன நடக்கின்றது என்றோ அதன் கடத்தல் சூத்திரிதாரிகளுக்கு என்ன நடக்கின்றது என்ற விபரங்கள் வெளிச்சத்துக்கு கொண்டு வரப்படுவதல்ல. ஜனாதிபதி அவர்களும் இதை ஒழிப்பதற்கு புதிய திட்டங்கள் தம்மிடம் உள்ளதாக தம்பட்டம் அடிப்பதை காண்கிறோம். சீனி இறக்குமதி செய்யப்பட்ட கொள்களன்களின் பலகோடி பெருமதியுடைய "கொக்கேன்" என்ற போதை பொருள் சிக்கியிருந்ததான தகவல்கள் கடந்த மாத ஆரம்பத்தில் வெளிவந்தன. இன்னும் 800கொள்கலன்கள் பரிசீலனை செய்யப்பட்டு முடிக்கவில்லை என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அச்சீனியை வர்த்தகர்கள் பொறுப்பேற்காத நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இறக்குமதியைச் செய்த பெருச்சாளிகள் சிக்கினார்களா? அவர்களைப் பற்றிய தகவல்கள் என்னவாயிற்று? பிணையில் வெளிவந்தனரா? என்பது கூட புரியாத புதிராகவே உள்ளது. இவை ஒருபுறம் இருக்க குடாநாட்டு மாணவர்களிடையே போதைவஸ்து அதிக பாவனையில் இருப்பதான தகவல்களும், போதை பொருள்களை இறக்குமதி செய்யும் கேந்திர நிலையமாக யாழ்ப்பாணக் கரையோரங்களை பயன்படுத்துகின்றனர் என்பதுவும் அண்மைக்காலங்களில் அப்பகுதிகளில் கைப்பற்றப்பட்ட போதை வஸ்துக்களை அவதானித்தால் உணர முடிகின்றது. யுத்த காலத்திலோ அதற்கு முன்னரோ அப்படியொன்று இருப்பதாக மக்கள் அறிந்திருக்கவில்லை. யுத்தகால ஆரம்பத்தில் மண்ணெண்ணைய் அருமைப் பொருளாக இருந்த நேரத்தில் கூட மாணவர்கள் கல்வியில் மேம்பட்டு இருந்தனர் என்று மக்கள் தெரிவிக்கின்றனர். யுத்தத்தின் இறுதிக் காலப் பகுதியில் கல்வி நிலமை சீரளிந்துள்ளது என்பது கசப்பான அனுபவமாகும். யுத்தம் முடிந்து 7ஆண்டுகள் கழிந்துள்ள நிலையில் மாணவர்களின் கல்வி நிலை வருடாவருடம் கீழ் மட்டத்துக்கு சென்று கொண்டிருப்பதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. கல்வி நிலையை மேம்படுத்துவதென்றால் சமூகத்திலுள்ள பெற்றோர்க்கும் ஆசிரிய சமூகத்துக்கும் பொறுப்பிருக்கின்றது போதை பொருள் பாவனை எப்படி நடைபெறுகின்றது. இது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. எதிர்கால மாணவ சமூகம் சீரளிந்து விட்டால் நாட்டு மக்களின் வாழ்வும் சீரளிந்துவிடும் அபாய நிலை தோண்றக் கூடும். போதைபொருட்கள் உற்பத்தி செய்யும் நாடுகளில் பெரும்பாலான நாடுகள் மேற்குலக நாடுகளாகும். அல்லது மேற்குலகின் செல்லப்பிள்ளைகளாக இருக்கும் நாடுகளாகும். இந்த வர்த்தகம் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளை சீரளித்து வருகின்றது. இந்த நாடுகளின் தனவந்தர்களாலும் மேட்டுக்குடி அரசியற்வாதிகளாலும் அதிக பண வருவாய்க்காக மேற்கொள்ளப்படும் சிறந்த வர்த்தகமாக இது கருதப்படுகின்றது. சோஷலிச அரசியல் அமைப்பை கொண்ட நாடுகளில் இவ்வர்த்தகம் உட்புக முடியாதவாறு சட்டங்கள் ஆக்கப்பட்டுள்ளன. நாட்டை நேசிப்பதற்கான விழிப்புணர்வு மக்களிடம் உண்டு. எமது நாட்டைப் பொறுத்தவரையில் குறுகிய காலத்தில் அதிக பணம் சம்பாதிக்கும் நோக்கமுள்ள சமூக அமைப்பே நிலவுகின்றது. சமூக மாற்றமொன்றின் ஊடாகவே சிறந்த அரசியல் அமைப்பை உருவாக்க முடியும். எனவே மக்கள் விடுதலை முன்னணியினாகிய நாம் இந்நாட்டு மக்களிடம் பல வருடங்களாக விடுத்து வரும் கோரிக்கை யாதெனில் எம்மிடம் ஆட்சிக்கான அதிகாரத்தை அளிக்க வேண்டும் என்பதாகும். இந்நாட்டின் சகல பிரச்சினைகளுக்குமான தீர்வுக்குரிய வேளைத்திட்டம் எம்மிடம் உண்டு. சிறந்த கல்விமான்கள், புத்திஜீவிகள், ஆகிய அநேகர் எம்முடன் உள்ளனர். மக்கள் எதிர்பார்க்கும் நல்லாட்சியை எம்மால் மட்டுமே வழங்க முடியும். 68வருட புளித்துப் போன ஆட்சியை தூக்கியெறிந்து எம்முடன் இணையுமாறு உங்களை அழைக்கிறோம்.

# ஐக்கிய அமெரிக்காவில் நிறபேதம்

ஜுலை மாதத்தில் ஐக்கிய அமெரிக்காவில் வெள்ளை-கருப்பர்களுக்கிடையே பல மோதல்கள் இடம்பெற்றுள்ளது. பொலிசார் இரண்டு கறுப்பினத்தவர்களை கொலை செய்துள்ளதுடன், ஓர் ஆர்பாட்டத்தில் ஸ்னைபர் தாக்குதளால் ஐந்து வெள்ளை பொலிஸ் அதிகாரிகள் கொல்லப்பட்டனர். இச்சம்பங்களூடாக வெளிவருவது ஐக்கிய அமெரிக்காவில் வளர்ச்சியடைந்து வரும் நிறபேதத்தையே ஆகும். கீழ் காணும் புள்ளிவிபரங்கள் நிறபேதத்தின் தன்மையை கோடிட்டுக் காட்டுகின்றது.

- வறுமை - வெள்ளை இனங்களுக்கிடையே 10சதவீதம்
  கருப்பு இனங்களுக்கிடையே 26 சதவீதம்
- ஆக வறுமை - மொத்த ஐக்கிய அமெரிக்கர்களின் பங்கு 7சதவீதம்
  கறுப்பு இனத்தவர்களிடையே 12சதவீதம்
- தொழிலின்மை- வெள்ளை இன மக்களிடையே 5சதவீதம்
  கருப்பு இன மக்களிடையே 11சதவீதம்
- சிறைக் கைதிகள் அதிகப்படியாக உள்ள நாடு ஐக்கிய அமெரிக்காவாகும்.

சிறையிலுள்ள நபர்கள் 100,000 வெள்ளை இனத்தவருக்கு 500 பேர்
சிறையிலுள்ள நபர்கள் 100,000 கருப்பு இனத்தவருக்கு 3074 பேர்

- வயது 20 -30க்கும் இடையிலான கறுப்பு இனத்தவர்களில் 40சதவீம் சிறையில் வாடுகின்றனர்.
- 2016ல் மட்டும் கறுப்பு இனத்தவர்களில் 123பேர் பொலிசாரால் கொலைசெய்யப்பட்டுள்ளனர்.
- கைது செய்யப்படுதலில் பொலிசார் அதிகாரத்தை பிரயோகித்தல்
  வெள்ளை இனத்தவர்களை கைது செய்தமை 2சதவீதம்




- கருப்பு இனத்தவர்களை கைது செய்தமை 3.6சதவீதம்
- பொலிசாரால் கைது செய்தல்

| | | |
|---|---|---|
| சாதாரண புள்ளிவிபரம் | 100,000ற்கு | 108பேர். |
| வெள்ளை இனத்தவர் | 100,000ற்கு | 76 பேர். |
| கறுப்பு இனத்தவர் | 100,000ற்கு | 273 பேர். |

- கைது செய்யப்பட்ட பின்னர் அதிகாரத்தை பிரயோகித்தல்

| | | |
|---|---|---|
| வெள்ளை இனத்தவர் | 1000ற்கு | 36 பேர் |
| கறுப்பு இனத்தவர் | 1000ற்கு | 46பேர் |

- 2001 ஆண்டு முதல் 2013 ஆண்டு வரை ஐக்கிய அமெரிக்காவில் ஆயுதப் பிரயோகத்தில் 406,496 நபர்களை கொள்ளப்பட்டுள்ளனர்.
- 1997ஆண்டு முதல் இன்று வரையில் கூட்டுக் கொலைச் சம்பவங்கள் 51 இடம்பெற்றுள்ளது..

# இறுதிப்பயணத்தில் தேயிலைத் தொழிற்துறை!

# தொழிலாளர்களின் அடுத்து பணி என்ன?

200 வருடங்கள் பழமைவாய்ந்த தேயிலை தொழிற்றுரை இன்று படிப்படியாக வீழ்ச்சியடைந்துவருவது யாவரும் அறிந்ததே.

குறிப்பாக தேயிலை தேனீர் பானமாக மட்டும் கொள்ளாது பல்வேறு பொருட்களுக்கும், உணவுப்பொருட்களுக்கும் நிறப்பொருளாகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அவ்வாறு நிறப்பொருளாக பயன்படுத்தப்பட்ட நாடுகள் யுத்தம் மற்றும் வேறு பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்திருப்பதால் நமது நாட்டு தேயிலையின் கேள்வி அந்நாடுகளில் குறைவடைந்துள்ளது. அதோடு உலக சந்தையிலே தேயிலையின் விற்பனையின் போட்டியும் அதனை சமாளிப்பதற்கான எமது நாட்டு அரசாங்கங்களின் கவனமின்மையும், புதிய சந்தைகளைத் தேடுவதில் எமது நாட்டு அரசாங்கம் தோல்வி கண்டுள்ளமையும் தேயிலைத் துறைக்கு விழுந்திருக்கும் ஒரு பாரிய அடியாகும்.

அந்த வகையில் தற்போது சிலோன் டீ (Ceylon tea) உலகில் மங்காத முத்திரையைக் குத்திக் கொண்டிருந்தாலும் கென்யா, சீனா போன்ற நாடுகள் தேயிலையின் விற்பனை இடத்தை பிடித்துள்ளன. அதனை நிவர்த்தி செய்து கொள்வதற்கான எவ்வித வேலைத்திட்டங்களும் எமது நாட்டு அரசாங்கங்களிடம் கொள்கையளவில் காணப்படுவதில்லை. குறிப்பாக தரமான தேயிலையை உற்பத்தி செய்வதில் தோல்வி கண்டுள்ளது. தரமான தேயிலையை உற்பத்தி செய்வதில் தோல்வி கண்டுள்ளதால் எதிர்காலத்தில் சிலோன் டீ என்னும் பெயருக்கும் பாரிய தோல்வி இருப்பதை அவதாகிக்கக்கூடியதாக இருக்கிறது.

தேயிலை விலை விழ்ச்சி மற்றும் உற்பத்தி பின்னடைவு என்பன பெருந்தோட்டத் துறையில் தொழில்புரியும் மக்களைப் பெரிதும் பாதித்துள்ளது. குறிப்பாக தேயிலைப் பயிர்ச்செய்கை ஆரம்பித்தக்காலம் முதல் ஆதாவது தேயிலையின் தந்தை எனப்போற்றப்படும் ஜேம்ஸ் டெய்லர் காலம் முதல் இன்று வரையும் அந்த துறையை ஒட்டி வாழும் மக்களின் வாழ்வோ சொல்லித் தெரிய வேண்டியதில்லை. 1971ம் ஆண்டுக்கு முன்னர் தோட்டங்கள் பல்தேசிய கம்பனிகளிடமும் தனியார் முதலாளிகளிடமும் இருந்தது. அப்போது அந்தத் துறையில் தொழில் புரிந்த தொழிலாளர்களுக்கு உருப்படியான வேதனமோ அல்லது அவர்களின் ஏனைய நலன்புரித் தேவைகளோ சுகாதாரத்துறையோ மேம்படுத்தப்படவில்லை. அதன் பின்னர் தோட்டங்களை அரசாங்கம் பொருப்பேற்றது. அதன்பின்ன அரசாங்கத்தின் கண்காணிப்பின் கீழ் இருந்த தோட்டங்கள் அரச பெருந்தோட்ட யாக்கம் அல்லது அரச கூட்டுத்தாபனம் என்ற பெயரில் இருந்தது. தோட்டங்கள் அரச நிறுவனமாக மாற்றப்பட்ட போது அதில் தோழில் புரிந்த தோட்டத் தொழிலாளர்கள் அரச ஊழியர்களாக நடத்தப்படவில்லலை. அவர்களுக்கு வழங்க வேண்டிய வேதனமோ அல்லது ஏனைய நலன்புரி, சுகாதார திட்டமோ அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படவில்லை. குறிப்பாக கூறுவதானால் சுத்தமான குடிநீர் திட்டம்கூட மேற்கொள்ளப்படவில்லை. தோட்டத் தொழிலாளர்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்கும் திட்டத்தை 1987ம் ஆண்டு யுனிசெப் நிறுவனம் தான் ஆரம்பித்தது. அன்று ஆரம்பிக்கப்பட்ட குடிநீர் திட்டம் இன்று பராமரிக்கப்படாமல் தூர்ந்துவிடும் நிலைமையில் உள்ளது. அரசாங்கம் தோட்டங்களை




**தனியாரின் பிடிக்குள் இருக்கும் தோட்டங்கள் இன்று பாரிய நெருக்கடியை சந்திப்பதோடு அதில் வாழும் தொழிலாளர்களின் வாழ்வும் பாரிய சவாலுக்குமுகம் கொடுத்துள்ளது. தோட்டங்களை பாராமரிப்பதில் கம்பனிகள் அக்கறை காட்டுவதில்லை. தேயிலை மலைகள் ஒழுங்காக பராமரிக்கப்படுவதில்லை.**

நிர்வாகித்தப்போது தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள நிர்னய சபையினூடாக சம்பள உயர்வு என்றுமே வழங்கப்படவில்லை.

1992ம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் தோட்டங்களை தனியார் கம்பனிகளுக்கு தாரைவார்த்தது. 449 தோட்டங்களை 22 கம்பனிகளுக்கும் ஏனைய ஒருசில தோட்டங்களை அரசாங்கமும் நிர்வாகித்து வருகின்றது. தனியாரின் பிடிக்குள் இருக்கும் தோட்டங்கள் இன்று பாரிய நெருக்கடியை சந்திப்பதோடு அதில் வாழும் தொழிலாளர்களின் வாழ்வும் பாரிய சவாலுக்குமுகம் கொடுத்துள்ளது. தோட்டங்களை பாராமரிப்பதில் கம்பனிகள் அக்கறை காட்டுவதில்லை. தேயிலை மலைகள் ஒழுங்காக பராமரிக்கப்படுவதில்லை. அதன் காரணமாக தரமான தேயிலை கொழுந்து பெறமுடியாமல் போகின்றது. அதன் காரணமாக தரமான தேயிலைத்தூள் உற்பத்தி செய்ய முடியாத சூழல் ஏற்படுவதால் தேயிலை விலைக்கான கிராக்கி தேய்ந்து போகிறது.

அத்துடன் கம்பனிகள் தோட்டங்களில் உள்ள மரங்களை தறிப்பதால் பெருந்தோட்டங்களில் பாரிய வரட்சி நிலை தோன்றியுள்ளது. வரட்சியின் காரனமாக பெருமளவு தேயிலை செடிகள் இறக்கின்றன. கம்பனிகள் அதைக்கண்டுக்கொள்வதில்லை. அத்துடன் தோட்டங்களில் இருந்து தேயிலை நாற்று மேடைகள் முழுமையாகவே அழிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தேயிலை தொழிற்சாலைகள் படிப்படியாக மூடப்பட்டுவருகின்றது. குறிப்பாக 2002ம் ஆண்டு தொடக்கம் 2011ம் ஆண்டுவரையும் பதுளை மாவட்டத்தில் 36 தேயிலை தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. முழுநாட்டிலும் 37சதவீதமான தேயிலை தொழிற்சாலைகள் மூடப்பட்டும், வேறுதேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டும் வருகின்றன.

தற்போதும் கம்பனிகள் தமது இலாபத்தை அதிகரித்துக்கொள்வதற்காக தோட்டங்களில் போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. அத்துடன் கருங்கற்கள் மற்று தோட்டங்களில் இருக்கும் இயற்கை வளங்களையும் கணக்குப்பார்த்துக்கொண்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஒட்டுமொத்தமாக முழுத்தேயிலைத் தோட்ட கட்டமைப்பும் கோப்பிப் பயிர்செய்கையைப்போல் அல்லாவிடினும் அறுபதுவீதம் அழிவடைந்த நிலையே காணப்படுகிறது.

இவ்வாறு தோட்டங்கள் தொடர் அழிவை சந்தித்துக்கொண்டிருப்பதால் தோட்டங்களில் புதிய தொழிலாளர்கள் உள்வாங்கப்படுவதில்லை. கம்பனிகள் நட்டம் என்ற நொட்டிச் சாட்டைக்காட்டி தொழிலாளர்களை தொழிற்சங்கங்களுடன் சேர்த்து வதைக்கிறது. அதில் வதைபடும் தோட்டத் தொழிலாளர்கள் பல்வேறு பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்கின்றார்கள். பொருளாதார நெருக்கடி காரணமாக தோட்டப்புறங்களில் மந்த போசனம், இரத்த சோகை, சிசு மரணம், கல்வியில் அக்கறை காட்டாமை, போதைவஸ்த்துக்கு அடிமையாதல், அதிகமான இளம் விவாகரத்து,சுகாதார சீர்கேடு போன்றன தலைவிரித்தாடுகின்றது.

அந்த நிலைமையில் தோழிலாளர்களின் சம்பள உயர்வு நிபந்தனையின் அடிப்படையில் உயர்த்த கடந்த காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொண்ட போதும் அதுவும் இன்று காலாவதியான நிலையே காணப்படுகிறது. காலாவதியன நிபந்தனையுடனான ஒப்பந்தங்களுக்குப்பதிலாக புதிய குறிகிய கால திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. அதன் ஒரு கட்டம்தான் தற்போது அரசாங்கத்தால் தொழிலாளர்களுக்கு வழங்கப்போகும் 2500 ரூபா அதுவும் திட்டமிடப்படாத ஒன்றாகும். அதிலும் இலாபமடைபவர்கள் தோட்டக்கம்கனிகளாகும். அரசாங்கம் திரைசேரியில் இருந்து ஒரு தொகை பணத்தை கம்பனிகளுக்கு கடனடிப்படையில் கொடுக்கிறது. அதிலிருந்தே தொழிலாளர்களுக்கு கம்பனிகள் அதிகரிக்கப்பட்ட சம்பளமாக வழங்குகிறது. அந்த திட்டமானது ஒரு நீண்டபயணத்துக்கான அத்திவாரமல்ல. எனவே தோட்டத்தொழிற்றுரையும் அதனோடு இணைந்துள்ள தொழிலாளர்களின் வாழ்வும் பாரிய சவாலை எதிர்நோக்கிக் கொண்டிருப்பதால் நாளை தோட்டங்கள் தனியார் சிறுமுதலாளிகளின் சொத்தாகவும் மாற்றப்படலாம். அப்போது தோட்டத் தொழிலாளர்கள் சகலவற்றையும் இழந்த ஒரு சமூகமாக மாறுவதற்கான சூழல் தென்படுகிறது. அதனை தோற்கடித்து இந்நாட்டின் ஏனைய பிரஜைகளுக்குச் சமனான ஒரு இடத்தைப்பிடித்துக்கொள்வதாயின் தோட்டத் தொழிலாளர்கள் பாரம்பரிய சிந்தனைகளில் இருந்துவிடுபட்டு புதிய சிந்தனைக்கு அடிக்கல் நாட்ட வேண்டும்.

குறிப்பாக இதுவரையும் தொழிலாளர்கள் மத்தியில் பண்ணையடிமை முதலாளித்துவ ஆட்சிக்குப் பதிலாக ஒருபுதிய சமூதாய கட்டமைப்பை உருவாக்க முன்வர வேண்டும். கடந்த பல தசாப்தங்களாக இந்த பண்ணையடிமைமுறையினூடாக தொழிலாளர்களை ஏப்பம் விட்ட முதலாளிகளும் அவர்களுக்கு துணையாயிருந்த பேரம் பேசும், கரங்களை உயர்த்தும் கத்தரி தோட்டத்து சர்க்கார்களும் பலனடைந்துள்ளார்கள். இனிவரும் காலம் தொழிலாளர்களுக்கானது. அந்தப்பயணம் என்பது உழைக்கும் வர்க்கத்தை உயர்வடையச்செய்யும் சோசலிஸத்துக்கான பயணமாகும். அந்தப்பயணத்தில் தோட்டத் தொழிலாளர்கள் பங்காளர்களாக வெண்டியது காலத்தில் கட்டாயமாகும்.

# இலங்கையின் முதலாவது ஆயுதமேந்திய போராட்டம்!

## ஒரு பிரளயத்தின் தோற்றம்

1971 ஏப்ரல் போராட்டமே, இலங்கை அரசியலில் பாரிய அதிர்ச்சியை ஏற்படுத்திய நிகழ்வாகும். அது இலங்கை முதலாளித்துவ அரசியல் வரலாற்றில் உருவான முதலாவது ஆயுதமேந்திய போராட்டம் ஆகும். அப்போராட்டத்திற்கு ம.வி.மு.தலைமைத் தாங்கி வழிநடத்தியது, அப்போது 6 வயதே நிறம்பியிருந்த மக்கள் விடுதலை முன்னணியாகும். 71 போராட்டத்திற்கு 41 (இப்போது ஐம்பது வருடங்கள்) வருடங்கள் கடந்துள்ள நிலையில் அப்போராட்டத்தைப் பற்றிய பல்வேறுவிதமான கருத்துக்கள் வெளியாகிய வண்ணமுள்ளன. ஏப்ரல் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்த துரோகிகளும் போராட்டத்தின் தோல்வியைத்தாங்கிக் கொள்ள முடியாமல் எதிரிகளிடம் சரணடைந்தவர்களும் போராட்டத்தை ஒடுக்கியதன் பின்னர் ஆளும் வர்க்க கும்பலும் 71 போராட்டத்தைப் பற்றி தங்களது நிலையிலிருந்து கருத்துக்களை முனவைத்து வருகின்றனர். அவை அனைத்தும் விஞ்ஞான ரீதியற்ற உண்மையைத் திரிபுபடுத்துகின்ற கருத்துக்களே ஆகும். இன்றும் கூட ஒருசில 'ஓய்வுபெற்ற புரட்சிவாதிகள்' போராட்டத்தின் பெருமைகளைத் தம்வசப்படுத்திக் கொள்வதற்காக பல்வேறு ஊடகங்களில் உண்மை நிலையைத் திரிபுபடுத்திய கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். கட்டுரைத் தொடர்களை எழுதி வருகின்றனர். ஆனால், இவைகள் எதுவும் மக்கள் விடுதலை முன்னணியின் உண்மையான வரலாறல்ல.

ஏனைய நிகழ்வுகளைப்போன்றே 1971 ஏப்பிரல் போராட்டத்தை மார்க்ஸிச கண்ணோட்டத்திலும் இயகக்வியலின் அடிப்படையிலிருந்தும் பார்க்க வேண்டும். எந்தவொரு நிகழ்வுகளையும் வரலாற்றுரீதியாகவும் விடயங்களின் அடிப்படையிலும் அவைகளுக்கிருக்கும் இணைத்தொடபுகளுடன் பார்ப்பதே சரியான முறையாகும். அவைகளின் அடிப்படையிலேயே நாம் 71 போராட்டத்தைப் பார்க்க வேண்டும்.

### 1971 போராட்டம் தற்செயலானதல்ல

1971 எழுச்சியென்பது தற்செயலானதோ அரசை வீழ்த்தும் சதியோ அல்லது தனிநபர்களின் தான்தோன்றிதனத்தின் விளைவாகவே நிகழவில்லை. அக்காலத்தில் அரசியலில் தோற்றம்பெற்றிருந்த அரசியல் நிலைமைகளின் தர்க்கரீதியான விளைவுகளாகும். மிகச் சுருக்கமாக மீளாய்வு செய்தால், இக்காலத்தில் இலங்கையின் பின்தங்கிய முதலாளித்துவ முறை நெருக்கடிக்கு உள்ளாகியிருந்தது. அதேவேளை உலகம் முழுவதிலும் பல நாடுகளில்



தோன்றிய தேசிய விடுதலை போராட்டமானது சோஷலிசத்தை நோக்கி அடியெடுத்து வைத்திருந்தது. இலங்கையிலும் பழைய இடதுசாரிகள் இடதுசாரித்துவத்தைக காட்டிக்கொடுத்து வலதுசாரித்துவத்தை ஆரத்தழுவிக் கொண்டிருந்தமையின் காரணமாக அந்த இடைளியை நிறப்புவதற்காகவே புதிய புரட்சிகர இயக்கம் தோன்றியது. அதுவே மக்கள் விடுதலை முன்னணியாகும். ஆனால் மக்கள் விடுதலை முன்னணியை முளையிலேயே அழித்தொழிப்பதற்காக பழைய இடதுசாரிகளின் ஆதரவுடன் ஆளும் வர்க்கம் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்தது. கருத்தியல் ரீதியான, அமைப்பு ரீதியான, சட்டரீதியான மற்றும் ஆயுத ரீதியாக மக்கள் விடுதலை முன்னணிக்கு எதிராக இடம்பெற்ற அடக்குமுறை 1971ல் உச்சக்கட்டத்தை அடைந்திருந்தது. தமது நீதியான அரசியலுக்கு எதிராக ஆளும் வர்க்கத்தால் அடக்குமுறையை தொடுக்கப்பட்டபோது, இளம்பருவ இடதுசாரி பாட்டாளி வர்க்க இயக்கத்தின் பதிலடியாக அவசரமான ஆயுத்மேந்திய பேராட்டமாக மாற்றுவதற்குப் பதிலாக அதை தவிர்க்க கூடியதாயிருந்த போதிலும், அப்போது தோற்றம்பெற்றிருந்த அடக்குமுறையின் தன்மையும் ம.வி.மு.யில் தோன்றியிருந்த உள்ளக நெருக்கடியும் அதற்கு இடம்கொடுக்கவில்லை. அவ்வாறான நிலையில் தோற்றம் பெற்றதே 1971 போராட்டமாகும். அதேவேளையில் போராட்டத்தின்போது ஜே.வி.பி வெளிப்படுத்திய வீரம், போர்க்குணம், தியாகம் போன்ற சாதகமான பண்புகளையும் பலவீனங்களையும் மேற்கண்ட காரணிகளின் அடிப்படையிலேயே ஆராய வேண்டும்

71 ஜனவரி மாதம் இடம்பெற்ற மாவட்டச் செயலாளர்களின் கலந்துரையாடல் மிக முக்கியமானதும் தீர்மானகரமான கலந்துரையாடலாக அமைந்திருந்தது. இதில் பல முக்கியமான முடிவுகள் எடுக்கப்படிருந்தன. இக்கலந்துரையாடலில் நாட்டின் அரசியல் நிலைமையும் அரசாங்கத்தின் அடக்குமறையும் கட்சியின் உள்ளக நெருக்கடியைப் பற்றியும் ஆராயப்பட்டிருந்தது. அப்போது உள்ளக கருத்து முரண்பாட்டைத் தணிப்பது பற்றிய கவனம் செலுத்தப்பட்டிருந்தது. இக்கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட முடிவுகளில் மிகவும் பாராதூரமான முடிவு ஆயுதங்கள் சேகரிப்பதற்காக எடுத்த முடிவாகும்.

லொக்கு அத்துலவின் துரோகம்

அக்காலத்தில் முறையற்ற விதத்தில் ஆயுதங்களை தயாரிப்பதற்கு முயற்சித்தமை மற்றும் ஆயுதங்களைச் சேகரிக்கும் போக்குகள் காணபட்டபோதிலும், அதற்காக அமைப்பு ரீதியான முடிவுகள் எடுக்கப்பட்டது இக்கலந்துரையாடலிலாகும். ஆயுத சேகரிப்புக்கான முடிவானது தாக்குதல் நடத்துவதற்கான முடிவல்ல. அரசாங்கங்கத்தின்

> **ஏனைய நிகழ்வுகளைப்போன்றே 1971 ஏப்பிரல் போராட்டத்தை மாக்சிச கண்ணோட்டத்திலும் இயகக்வியலின் அடிப்படையிலிருந்தும் பார்க்க வேண்டும். எந்தவொரு நிகழ்வுகளையும் வரலாற்றுரீதியாகவும் விடயங்களின் அடிப்படையிலும் அவைகளுக்கிருக்கும் இணைத்தொடபுகளுடன் பார்ப்பதே சரியான முறையாகும்.**

அடக்குமுறை உக்கிரமடைந்தால் சுயபாதுகாப்பு கருதி போராடுவதற்காகும். அந்நேரத்தில் இந்துனேசிய எதிர்புரட்சியின் படிப்பினைகளையும் அனுபவங்களையும் மீளாய்வுட்படுத்தப் பட்டிருந்தது. இந்துனேசியாவில் இடம்பெற்ற சுகர்த்தோவின் சீர்திருத்தவாத கூட்டு அரசாங்கம் 1965ல் இராணுவ அதிகாரியாக அப்போதிருந்த சுகர்த்தோவின் தலைமையில் நிகழத்திய இராணுவ சதி புரட்சியின் மூலமாக வீழ்த்தப்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சி அளவுரீதியாக அப்போது பெரிய கட்சியாக இருந்தது. ஆனால் அடக்குமுறைக்கு முகம்கொடுக்க முடியாமல் இந்துனேசிய கம்யூனிஸ்ட் கட்சி ஒரே இரவில் மகா சங்காரத்தின் மூலமாக பூண்டோடு அழிக்கப்பட்டது. இந்த அனுபவத்தின்படி எதிரியினர், ஜே.வி.பியை ஒரே இரவில் அழிதொழிக்க முற்படுவார்களானால், தமது சுயபாதுகாப்பு கருதி அதற்கு முகம்கொடுப்பதற்காக கட்சி ஆயுதபாணியாக வேண்டும் என்பது தெளிவான விடயமாகும்.

அதற்கிணங்க முழுநேர ஊழியர்கள் மட்டத்தில் ஆயுதங்களைச் சேகரிப்பதற்கும் ஆயுதங்களைத் தயாரிப்பதற்கும் அவைகளைக் களஞ்சியப்படுத்தி பாதுகாப்பாக வைத்திருப்பதற்கும் முடிவுசெய்யப்பட்டது. ஆனால் இந்த முடிவு நடைமுறையில் பலவீனமடைந்திருந்தது. பின்னர் ஆயுத சேகரிப்பிற்கும் தயாரிப்பதற்கும் கீழ்மட்ட உறுப்பினர்களும் பயன்படுத்தப்பட்டு வந்தனர். கட்சியை ஆயுத பாணியாக்கும் நடைமுறை முழுநேர ஊழியர்களுக்கும் அப்பால் சென்றதன் காரணமாக ஜே.வி.பி. ஆயுதம் திரட்டுவது எதிரிக்குத் தெரிய வந்தது. எவ்வாறாயினும் அதிலிருந்து தெளிவாக புரிந்துக்கொள்ள வேண்டியது என்னவெனில், அப்போது நிலவும் நிலைமைகளுக்கு ஏற்பவும், சர்வதேச படிப்பினைகளுக்கு ஏற்பவும் புரசிகர கட்சியாக கட்சியை ஆயுதபாணியாக்கும் முடிவினை எடுத்திருந்த போதிலும் தாக்குதல் நடத்துவதற்கான முடிவினை எடுக்கவில்லை என்பதாகும். ஆயுதம் சேகரிப்பதற்கான முடிவென்பது தாக்குதலுக்கான முடிவல்ல.

அடுத்தபடியாக மேற்குறிப்பிட்ட கலந்துரையாடலில் இன்னுமொரு முடிவு எடுக்கப்பட்டது. அது 1971 மே தினத்தை அனுஷ்டிப்பது பற்றியதாகும். மே தினத்தன்று நாட்டில் பல நகரங்களில் கூட்டங்களை நடத்துவதாக முடிவு எடுக்கப்பட்டது. 1971 ஏப்ரல் மாதம் தாக்குதலைப் பற்றி சிந்தித்திருக்கவில்லை என்பது அதில் சாட்சி பகிர்கிறது.

ஆயுதங்களை சேகரிப்பது, களஞ்சியப் படுத்தல் போன்ற விடயங்களில் கட்சியின் உள்ளக நெருக்கடி பாரிய பாதகமான தாகக்த்தை ஏற்படுத்தியிருந்தது. குறிப்பாக லெக்கு அத்துல உள்ளிட்ட கும்பல் ஆயுதங்களைத் தமது கட்டுப்பாட்டில் மறைத்து வைத்துக் கொண்டிருந்தமையினால், மேலதிக சிக்கல்கள் தோன்றின.

தொடரும்...

01ம் பக்கம் தொடர்ச்சி.. **நாட்டுப் பிரச்சினைகள்...**

இது பற்றி மக்கள் விடுதலை முன்னணியின் பிரச்சாரச் செயலாளர் தோழர் விஜித ஹேரத்திடம் 'செஞ்சக்தி' வினவியபோது மக்கள் விடுதலை முன்னணியால் இப்போது முன்னெடுக்கப்பட்டு வரும் 'கடன் சுமை, வரிச் சுமை, வீழ்ச்சியடையும் பொருளாதாரம்' கருத்தரங்களுக்குப் புறம்பாக கிராம மட்டத்தில் ஆகஸ்ட் மாதம் முதல் வீடு வீடாகச் செல்லும் இயக்கத்தை முன்னெடுக்க இருப்பதாகவும், "கூட்டு அரசாங்கம் மிக வேகமாக மக்களின் வெறுப்பை சம்பாத்தித்து வருவதால், ஸ்ரீ.ல.சு.க வின் ராஜபக்ஷாக்கள் அந்த நிலைமை தம்மை நோக்கி மக்கள் திரும்புகிறார்களென கணக்கு போடுகின்றனர். ஆனால் அவர்கள் மீண்டும் மக்களை ஏமாற்றுவதற்கு நாம் இடமளிக்க மாட்டோம். மக்கள் ம.வி.மு தலைமையில் உருவாகும் மாற்று சமூக பொருளாதார வேலைத்திட்டதைச் சூழ அணிதிரள்வதை எவராலும் தடுக்க முடியாதென். தோழர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

05ம் பக்கம் தொடர்ச்சி.. **தேசிய அரசாங்கத்தின்...**

கைபற்றும் கனவுகளுடன் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். அதனால் போலியான தேசிய அரசாங்கத்தின் காலத்தை நீடித்தலானது முதல் இன்னிங்ஸ் முடிவடைவதற்குள் இரண்டாவது இன்னிங்ஸ் ஆரம்பமாவதுடன் ராஜபக்ஷ கும்பலின் கோஷங்களால் மக்களுக்கு எதையும் பெற்றுக் கொடுக்க முடியாது என்பது தெளிவாகிறது. அதேவேளை மக்கள் மீதான ஒடுக்குமுறைகள் மாற்றமின்றி தொடரும் என்பதைப் புரிந்துக் கொள்ள வேண்டும் அத்துடன் ஊழல் மோசடிகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கும் ஏதுவாகும்.

பொருளாதார அபிவிருத்தி பற்றிய மெகா திட்டங்கள் பற்றியும், பத்து லட்சம் தொழில் வாய்ப்புகள் பற்றிய, ஒற்றுமையாக நாட்டை ஆளுதல் எனும் மாயையிலிருந்து வாய் சவடால்களிருந்தும் உண்மை நிலையைப் புரிந்து கொள்வதற்கும் அதை மக்களுக்குப் புரிய வைப்பதற்கும், மக்கள் நேயமுள்ள சக்திகள் செயற்பட்டாக வேண்டும். தேசிய அரசாங்கத்தின் பெயரால் மக்கள் சொத்துக்களை விரயமாக்கி, மக்கள் மீது சுமைகளை ஏற்றிக் கொண்டு சென்றுகொண்டிருக்கும் இந்த முதலாளித்துவ கூட்டு அரசாங்கத்தின் பிற்போக்குப் பயணத்தையும் போலி எதிர்கட்சியின் பெயரால் கொண்டு செல்லப்படும் ராஜபக்ஷ கும்பலின் பிற்போக்கு நடவடிக்கைகளையும் ஒன்றாகத் தோற்கடிப்பதற்கும் உண்மையான வெற்றிப் பாதைக்கும், சமூக நீதியின் பாதைக்கும், சமூக முன்னேற்றத்தின் பாதைக்கும் நாட்டைக் கொண்டுச் செல்லக் கூடிய சக்தியை நிர்மாணிப்பதற்காக அனைவரும் முன்வர வேண்டும். இது காலத்தின் கட்டாயத் தேவையாகும்.

03ம் பக்கம் தொடர்ச்சி.. **யாழ் பல்கலைக்கழக...**

வாழ்க்கையோ, கௌரவமான மக்களையோ உருவாக்க முடியாது. உலகில் உள்ள முதலாளித்துவ நாடுகளின் சீரளிவைப் போன்று இலங்கையும் சீரளிவது உறுதியாகும். எனவே எமது நாட்டு மாணவர்கள் இந்நாட்டின் சமூக மாற்றத்திற்காக உழைக்க வேண்டும். எமது நாட்டு வளங்களில் நம்பிக்கை வைக்க வேண்டும். பொருளாதார வளர்ச்சி ஏற்பட வேண்டுமாயின் நமது தேசத்தின் கல்விமான்களின் திட்டமிடல் அவசியமாகும். இதனை உணர்ந்து மாணவர்கள் செயற்பட வேண்டும். வறுமை, வேலையில்லாப் பிரச்சினை போன்றன எதிர்காலத்தின் பிரதான சவால்களாகும். பல்கலைக்கழகங்களில் படிக்கும் காலங்களில் நடாத்தும் கலைநிகழ்ச்சிகள் மாணவர்களின் ஐக்கியத்துக்கான வளர்ச்சிப் படியாக இருக்க வேண்டுமே தவிர குரோதத்தை வளர்ப்பதாக இருக்கக் கூடாது என்பதில் விளிப்பாக இருக்க வேண்டும். கலை நிகழ்ச்சிகள் இனங்களின் பெருமைக்காக நடத்தப்படக் கூடாது என்பதில் விழிப்பாக இருக்க வேண்டும். கலை, கலைக்காக அல்ல மக்களைப் புதிய பாதைக்கு இழுத்துச் செல்வதாக இருக்க வேண்டும். இனத்தில், மதத்தில் வெறிகொள்வதற்குப் பயன்படுத்தக் கூடாது. இனத்துவ, மொழித்துவ, மதத்துவ கோட்பாடுகள் முதலாளித்துவத்தின் பிரதான ஆயுதங்களாகும். வர்க்க விடுதலைக்கு இவ்வாயுதங்கள் பயனற்றவை எனவே மாணவர்களிடம் மீண்டும் மீண்டும் வலியுறுத்தும் விடயம் யாதெனில் முதலாளித்துவ அமைப்பை இனிமேலும் விட்டுவைக்கக் கூடாது. இந்த அமைப்பு முறையை தூக்கியெறிந்து புதிய அமைப்பை நிறுவ வேண்டும். அதுவே பாட்டாளி வர்க்க ரீதியிலான அமைப்பாகும். மேட்டுக் குடி ஆட்சியாளர்களால் தேனும், பாலும் ஓடச் செய்ய ஒருபோதும் முடியாது. ஆனால் மீண்டும் மீண்டும் இதோ சகல மக்களுக்கும் விடிவை ஏற்படுத்துவோம் என்று சூழுரைக்கின்றனர். எதிர்காலத்தில் பெரும்பொறியொன்றினுள் எம்மை சிக்கவைக்கப் போகின்றனர் என்பதை நாம் அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

06ம் பக்கம் தொடர்ச்சி.. **வேற்றுமைகளின் ஒற்றுமை...**

தமிழர்களுக்குத் தனியாக பிரிகின்றதா? அல்லது முஸ்லீம்களுக்குத் தனியாக பிரிகின்றதா? இல்லை, வர்க்கங்கள் அடிப்படையிலேயே இது பிரிகின்றது. அது எப்படி? சமுதாயத்தில் ஆக மேல் மட்டத்தல் உள்ள 10சதவீதத்தினருக்கு இதில் 35.4சதவீதம் பிரிகின்றது. சமுதாயத்தில் ஆகக் கீழ் மட்டத்தில் உள்ளோருக்கு இதில் 1.1 சதவீதம் மட்டுமே கிடைக்கின்றது. நாம் அனைவரும் ஒன்றிணைந்து பெரியதொரு இட்லியை அவிக்கிறோம். இதனை சரியாக 100 துண்டுகளாக வெட்டுகிறோம் அதில் 35துண்டுகளை 10பேர் எடுத்துக் கொள்கின்றனர். கீழ் மட்டத்தில் உள்ள 10பேருக்கு 1துண்டு மட்டுமே கிடைக்கின்றது. இது நியாயமா? இது மிகவும் அநீதியான முறையொன்று அல்லவா? இம்முறையை மாற்ற வேண்டுமா, வேண்டாமா? இந்த ஆட்சியாளர்கள் ஒருபோதும் இம்முறையை மாற்றமாட்டார்கள். எனவே சிங்களம், தமிழ், முஸ்லிம் ஆகிய சாதாரண மக்கள் ஒன்றிணைந்தே இம்முறையை மாற்றியமைக்க வேண்டும். அந்தவகையில் தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்புவது நம் அனைவரினதும் கடப்பாடாக இருக்க வேண்டும் என தெரிவித்தார்.

சோஷலிச இளைஞர் சங்கத்தின் தேசிய அமைப்பாள் தோழர் எரங்க குணசேகர உரையாற்றுகையில், யுத்தம் முடிவடைந்ததன் பின்பு வடபகுதியில் இவ்வாறான இலக்கிய விழா யாராலும் நடாத்தப்படவில்லை. ஆனால் சோஷலிச இளைஞர் சங்கம் பல இன்னல்களுக்கு மத்தியில் அந்தச் சவாலை வெற்றிகொண்டுள்ளது. இவ்விடத்திற்கு வருகை தரும்போது நீங்கள் அவதானித்திருப்பீர்கள் வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் அந்த அரணில் தேசிய ஒற்றுமையை, நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு எவ்வளவு ஆர்வத்துடன் அவர்களது உணர்வை வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என்று, இனவாதச் சிந்தனைகளை புறந்தள்ளிவிட்டு அவர்களது மனசாட்சி சித்திரங்களாக, கவிதைகளாக வடிவமைக்கப்பட்டுள்ளது. எனவே வடக்கு, தெற்கு என்ற வேறுபாடின்றி அவரவர்களுடைய தனித்துவங்களை பாதுகாத்துக் கொள்ளும் அதேவேளை அவற்றைத் தடைகளாகக் கருதாமல் அனைத்து மக்களும் ஒன்றிணைந்து தேசிய ஒற்றுமையை, நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக முன்வரவேண்டும் என்று கூறினார்.

இலக்கியப் போட்டிகளில் ஈடுபட்ட தமது படைப்புகளுக்கு, ஆக்கங்களுக்கும் பரிசில்களை பெற்றுகொள்வதற்காக வருகை தந்திருந்த பாடசாலைச் சின்னச் சிறார்களிலிருந்து திறந்த மட்டத்தில் வெற்றிபெற்றோரும் வருகை தந்திருந்தனர். இதில் சிறப்பம்சம் என்னவென்றால் இந்த படைப்பாளர்களை ஊக்குவிக்கும் வகையில் படைப்புகள், **ஆக்கங்கள் அனுப்பிய அனைவருக்கும் ஒரு சான்றிதழ்கள்** வழங்கப்பட்டது.

அதன்பின் கலாசார நிகழ்வின்போது யாழ்ப்பாணத்தில் பிரபல்யம் வாய்ந்த சக்சபோன் இசைக்குழுவான **"Saxaphone Brothers"** இசைக்குழுவினர் நிகழ்வின் ஆரம்பத்தில் மிகவும் சிறப்பாக தமது திறமைகளை வெளிக்காட்டும் வகையில் வருகை தந்திருந்து அனைவரையும் கவரும் வகையில் சக்சபோன் இசை விருந்தினை வழங்கினார்கள். அதன்பின் எமது நாட்டு இசையுலகில் என்றும் மறக்க முடியாத தமிழ் பாடகர்களான கலாவதி சின்னசாமி மற்றும் சூரியகுமார் முத்தழகு அவர்கள் தமிழ், சிங்களம் இரு மொழிகளிலும் பாடி பார்வையாளர்களை நடனமாட வைத்தனர். அத்துடன் என்றும் எமக்கு ஒத்துழைப்பு வழங்கும் தோழர் சுலக்ஷன் அவர்கள் சோஷலிச இளைஞர் சங்கத்தின் பாடலை மிகவும் உத்வேகத்துடன் படித்ததோடு பல்கலைக்கழக மாணவர்களின் நடன நிகழ்ச்சியும் அனைவரையும் கவர்ந்தது. அதேபோன்று பறை மேல வாத்தியக் குழு நடாத்திய நிகழ்ச்சி தென்பகுதியல் இருந்து வருகை தந்திருந்த அனைவருக்கும் ஓர் புதிய அனுபவத்தை பெற்றுக்கொடுக்கும் வகையில் அமைந்ததோடு மேலும் சிறப்பை அளித்திருந்தது.


அடுத்த கட்டம் ஜுலை 24,25,26 ஆகிய தினங்களில் சகோதரத்துவ உறவுகளைத் தேடி என்ற தொணிப்பொருளின் கீழ் யாழ்ப்பாணத்தில் மூழாய் கிழக்கு, வாதரவத்தை, நாவட்குழி 300வீட்டுத்திட்டம் மற்றும் 5வீட்டுத்திட்டம் ஆகிய பகுதிகளிலும் கிளிநொச்சியில் பாரதிபுரம், தர்மபுரம் பகுதியில் சோஷலிச இளைஞர் சங்கத்தின் தோழர், தோழிகள் சென்று அப்பகுதி இளைஞர், யுவதிகளுடன் ஒன்றிணைந்து பொதுப்பணிகளில் ஈடுபட்டனர்.

அவற்றுள் கைவிடப்பட்ட நூலகசாலையை புனரமைப்புச் செய்தல், முன்பள்ளியை திருத்திக் கொடுத்தல், சிறுவர் பூங்காவை திருத்தி கொடுத்தல், அப்பகுதி மக்களின் நோய்களை ஆராய்ந்து இலவசமாக மருந்துகளை வழங்கும் மருத்துவ முகாம்களை நடாத்துதல், இரவு நேரங்களில் அம்மக்களை மகிழ்சியூட்டும் கலாசார நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டதோடு, இதுவரை காலமும் அரசியற்வாதிகள் தேர்தல் காலங்களில் மட்டும் வருகை தந்து எமது வாக்குகளை பெற்றுச் செல்லும் அனுபவம் மட்டுமே எமக்கு இருந்தது. ஆனால் சோஷலிச இளைஞர் சங்கத்தினர் தேசிய ஒற்றுமையை, நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதை வார்த்தைகளுக்கு மட்டும் வரையறுக்காமல் செயற்பாட்டு ரீதியிலும் காட்டி வருவதை அன்புடன் வரவேற்பதாகவும் எதிர்வரும் காலங்களில் நாங்களும் இந்நடவடிக்கைகளுடன் கைகோர்த்து செயற்படுவோம் என்று அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

2016 சகோதரத்துவ தினத்தின் இறுதிக் கட்டம் ஜுலை 28ம் திகதி கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் நடாத்தப்பட்டது. ஒரே நாட்டில், பல வர்ணங்கள் என்ற தலைப்பில் நிர்மாணிக்கப்பட்டிருந்து பிரமாண்டமான ஓவியத்தை கலைஞர்கள், நடிகர்கள், புத்திஜீவிகள், அரசியற் தலைவர்கள், ஊடகவியலாளர்கள், சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து நிறந்தீட்டினார்கள். அதன்பின் உரையாற்றல்களும் மிகச் சிறப்பான இசை நிகழ்ச்சியுடன் அனைவரது உள்ளங்களிலும் புதிய எதிர்பார்ப்புகளைப் பதித்து இனிதே நிறைவு பெற்றது.


சகோதரத்துவ இலக்கிய விழா













# ரணில், மைத்திரி அரசாங்கம் மக்கள் ஆணையுடன் விளையாடுகிறது.

**மக்கள் விடுதலை முன்னணியின் அரசியற் குழு அங்கத்தவர் தோழர் சுனில் ஹந்துன் நெத்தி**



திருட்டுபோன்தைய ரணில்-மைத்திரி கூட்டு அரசாங்கத்தை ஆட்சிபீடமேற்றிய மக்கள் ஊழல், மோசடி, வீண்விரயம் ஆகியவற்றுக்கு எதிராகவே வாக்களித்தனர். ஆனால், இன்றைய அரசாங்கமும் மக்க[illegible] ஆ[illegible] விளையாடி வழமையான ந[illegible] கொள்கைகளை[illegible] கிறது என தோழர் சுனில் ஹந்துனெ[illegible]த்தி தெ[illegible]வித்தார்.

அவர் மேலும் கரு[illegible]த்[illegible] தும்போது இன்று கணக்காய்[illegible] விடயம் பெரிதாக பேசப்படுகின்[illegible] ற்யுள்ளது. பாராளுமன்றத்தில் கோ[illegible] மற்றும் நிதி கணக்காய்வுக் குழுக்களுக்கு கணக்காய்வாளரின் பங்களிப்பின் மூலமாக மத்திய வங்கி முறி கொடுக்கல் வாங்கல் பற்றிய கணக்காய்வாளரின் 1251 பக்க அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளார். இப்போது அந்த அறிக்கை தொடர்பாகவும் அவரது முயற்ச்சிகள தொடர்பாகவும் சமூகத்தில் பெரும் வரவேற்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த அரசாங்கம் மக்கள் ஆணையை மதிக்காவிட்டாலும் கணக்காய்வாளர் அதை மதித்துச் செயற்படுகிறார். அதன் காரணமாக சமூகத்தின் கணக்காய்வாளர் பற்றிய மதிப்பு அதிகரித்துள்ளது.

இந்த அரசாங்கம் ஜனநாயகம், சட்டத்தின் சுயாதீனத் தன்மையைப் பற்றிப் பேசிக் கொண்டு, ஊழல், மோசடிகளை களைவதாகக் கூறிக்கொண்டு அதற்கு எதிர்மாறான நடவடிக்கைகளையே எடுத்து வருகிறது. கணக்காய்வுச் சட்டமூலத்தை பாராளுமன்றத்திற்கு கொண்டு வராது அதை இடையில் தடுத்து வைத்துள்ளது. ஐ.தே.கவினர் கணக்காய்வுச் சட்டத்தில் தேசியப் பாதுகாப்பிற்கு குந்தகமான சரத்துக்கள் அடங்கியிருப்பதாகவும் அதனால் அதற்கு 'கெபினட் உபகுழு" அமைத்து தேசிய பாதுகாப்பிற்குக் குந்தகமான சரத்துக்கள் நீக்கப்பட வேண்டுமெனக் கூறி வருகின்றனர். தேசிய கணக்காய்வுச் சட்டமூலத்தில் தேசியப் பாதுகாப்பிற்கு குந்தகமான ஒரு சரத்தாவது அடங்கியிருக்கிறதா? இருந்தால் அதை நிரூபித்துக் காட்டும்படி நாம் அவர்களுக்கு சவால் விடுக்கின்றோம். அதேபோன்று தேசிய கணக்காய்வுச் சட்டமூலத்தின் அதிகாரத்தை குறைப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறனர். தேசிய கணக்காய்வுச் சட்டமூலத்தில் 21வது சரத்தின்படி அதிகாரிகளுக்கு மிகைவிதிப்பு செய்ய முடியும். தவறிழைக்கும் அதிகாரிகளிடமிருந்து நட்டத்தை அறவிட முடியும். நாட்டில் நிர்வாக அதிகாரிகள் செய்யும் தவறுகள், தவறில்லையா? வெள்ளை கழுத்துப் பட்டிகாரர்களின் தவறுகளைப் பற்றி ஏன் பேசுவதில்லை? குடும்ப கஷ்டத்தில் உள்ள ஒருவர் தேங்காய் ஒன்றை களவாக பறித்தாலும் பெரும் குற்றமாகப் பார்க்கின்ற அல்லது சீ.சீ.டி.வி கெமராக்களில் களவுகளைத் தேடுகின்ற நமது நாட்டில் 'வைட் கொலர் க்ரைம்' பற்றி பேச மறுப்பதேன்? அவற்றை அம்பலப்படுத்த அஞ்சுவதேன்? அவர்கள் அரசியல் அனுசரனையுடன் களவாடுகின்றனர். அவர்கள் அதாவது வெள்ளை கழுத்துப் பட்டிக்கார்கள் கணக்காய்வுச் சட்டத்திற்கு பயப்படுகின்றனர்.

சட்டத்தின் சலுகைகளை குறைத்து மதிப்பிடுகின்ற அரசாங்கம் கூற வருவதாவது நாம் திருடர்களை பிடிக்க இடமளிக்க மாட்டோம் என்பதாகும். நாம் திருடர்களைப் பாதுகாக்கின்றோம் என்பதாகும். மகிந்த ஆட்சியில் திருடர்களைப் பாதுகாத்தது போன்றே மைத்திரி-ரணில் ஆட்சியிலும் திருடர்களைப் பாதுகாக்கின்றனரா? என தோழர் ஹந்துன்நெத்தி கேள்வி எழுப்பினார். இச்செய்தியாளர் மாநாட்டில் ம.வி.மு மத்திய குழு உறுப்பினர் சட்டத்தரணி தோழர் சுனில் வட்டகல அவர்களும் கலந்துக் கொண்டார்.

# கல்வி இன்று செல்வந்தர்களின் சலுகையாக மாறியுள்ளது

**மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தோழர் அநுர திசாநாயக்க**



சகல பிள்ளைகளுக்கும் சமனான கல்வி உரிமையை உறுப்படுத்துவதற்குப் பதிலாக கல்வி பணம் படைத்தவர்களின் சலுகையாக மாறியுள்ளதாக குற்றம்சாட்டு தோழர் அனுர திசாநாயக்க கல்வியை விற்பனைப் பண்டமாக மாற்றி விற்று இலாபமிட்டுவதை அரசாங்கம் தனது கொள்கையாக கொண்டு இயங்குகிறது.

அவர் இந்தக் கருத்தினை கடந்த 17ம் திகதி ம.வி.மு தலைமையகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே தெரிவித்தார். அங்கு மேலும் கருத்து தெரிவித்த தோழர் அனுர திசாநாயக்க "அறிவை விற்பது நாகரீகமா? இந்த அரசாங்கத்தின் கல்விக் கொள்கையாகக் கொண்டிருப்பதென்ன? எனக் கேள்வி எழுப்பினார்.

"அறிவு என்பது மனிதகுல நாகரீகத்தின் அனுபவங்களின் தொகுப்பாகும். அது மனித குலத்திற்கு சொந்தமானதாகும். அந்த அறிவு 'சயிட்டம்' முதலாளிகளுக்கு சொந்தமானதல்ல. அவருக்கு அறிவை தாரைவார்க்க முடியுமா? அறிவை விற்று இலாபமீட்டுவது நியாயமானதா என்று இப்போது உலகம் முழுவதிலும் உரையாடல் ஆரம்பமாகியுள்ளது. முன்னர் இருந்த ஆட்சியாளர்களும் தற்போது இருக்கும் ஆட்சியாளர்களும் கல்வியை விற்பதற்கு திட்டமிட்டனர். 'சயிட்டம்' நிறுவனமே அதற்கான சிறந்த உதாரணமாகும். கல்வியை விற்பதற்கு எதிராக மாணவர் போராட்டம் விரிவடைந்துள்ளது. இன்று மாணவர்கள் மட்டுமல்ல இப்போது அது மக்கள் போராட்டமாக மாறியிருக்கிறது. கல்வியை சலுகை படைத்த வர்க்கத்திற்கு மட்டும் வழங்குவதை தடுத்தாக வேண்டும். அரசாங்கம் கல்வியை விற்கும் தமது கொள்கையை மாற்றுவதற்குப் பதிலாக இன்று நீதிமன்றத்தின் பணியாகக் கருதி நீதிமன்றத்திடம் ஒப்படைத்துள்ளது. சுகாதார அமைச்சிடம் ஒப்படைக்கிறது. சுகாதார அமைச்சரின் சொந்தக்கார பிள்ளைகள் இன்று 'சயிட்டம்' கல்லூரியின் மாணவியாவார். இன்று அரசாங்கம் பந்தை ஆளுக்கு ஆள் மாற்றும் கொள்கையை கொண்டுள்ளதால் மாணவர்கள் இன்று இலவசக் கல்வியைப் பாதுகாப்பதற்காக வீதியில் இறங்கி போராட வேண்டிய நிலை தோன்றியுள்ளது.

பத்தரமுள்ள, பெலவத்த, பன்னிபிட்டிய வீதி,464/20ல் வசிக்கும், எம். ரில்வின் சில்வா ஆகிய நான் இலக்கம் 43/20, நுககஹ பிளேஸ், பிலியந்தலை வீதி, மகரகமவில் அமைந்த நியமுவா வெளியீடு நிறுவனத்தில் அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.